மலர் 3 • இதழ் 3 • ஜூலை 2018 • ரூ.15/-

AGARAM FOUNDATION
அறம் செய விரும்பு

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## கல்விக்கடன் வாங்குவது எப்படி?

## இந்திய உயர்கல்வியில் மாற்றம் தேவையா?




ஒரு வேளை
மிஸ் பண்ணினாலும்...
பீல் பண்ணணும்.........
அதுதான் சக்தி மசாலா !
I ❤ FOOD
சக்தி மசாலா ...
அன்பின் சுவையான
அடையாளம் ...
சக்தி ®
மசாலா
சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு – 638 004.
போன் : 0424 – 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com
• சக்தி மசாலா சமையல் பொடி வகைகள் • சக்தி ஊறுகாய் வகைகள் • சக்தி சன் பிளவர் ஆயில் • சக்தி பருப்பு வகைகள்
• சக்தி பஜ்ஜி போண்டா மாவு • சக்தி ராகி மாவு • சக்தி கடலை மாவு • சக்தி அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






**COURSES AVAILABLE**

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

100% PLACEMENT OPPORTUNITY

ADMIRABLE INFRASTRUCTURE

WORLD CLASS ACADEMIC AMBIENCE

EMINENT FACULTY

## SATHYABAMA UNIVERSITY

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial

Email: entranceexam2016@sathyabamauniversity.ac.in | www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344

# ஒவ்வொருவரும் பகவானாக வேண்டும்!



**அனைவருக்கும் அன்பு வணக்கம்.**

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்கிற வரிசையில் குருவின் இடத்திற்கு மதிப்பையும் மாண்பையும் கூட்டியிருக்கிறார் ஆசிரியர் பகவான். திருவள்ளூர் மாவட்டம் வெள்ளியகரம் என்ற கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிய பகவான், அர்ப்பணிப்புள்ள ஆசிரியராக தமிழகம் கடந்து தேசிய அளவில் கவனம் ஈர்த்திருக்கிறார்.

ஐந்து ஆண்டுகள் வெள்ளியகரம் பள்ளியில் பணிபுரிந்த ஆசிரியர் பகவானை, வேறொரு பள்ளிக்கு இடமாறுதல் செய்தது பள்ளிக்கல்வித் துறை. தங்களுடைய அன்புக்குரிய ஆசிரியரை வேறு பள்ளிக்கு அனுப்ப முடியாது என்று அவரிடம் படித்த மாணவர்கள் அவரைக் கட்டிப்பிடித்து கதறி அழுத காட்சி அனைவரையும் நெகிழச் செய்தது. ஆசிரியரைச் சூழ்ந்துகொண்டு, அவருடைய கைகளைப் பிடித்து இழுத்து போகக்கூடாது என்று கண்ணீரோடு தடுக்கிற மாணவர்களின் புகைப்படங்களைப் பார்த்த இந்தி நடிகர் ஹ்ரித்திக் ரோஷன், 'இந்தக் காட்சி என் நெஞ்சை உருக்குகிறது' என்று ட்விட்டரில் நெகிழ்ந்திருக்கிறார். இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் அவர்களும் இந்த 'குரு-சிஷ்ய' பிணைப்பைப் பாராட்டியிருக்கிறார். அனைத்து ஊடகங்களிலும் இந்த நெகிழ்வுக் காட்சி வெளியாகி, ஒவ்வொருவரையும் தங்களின் சிறந்த ஆசிரியர்களை நினைவுகூர வைத்திருக்கிறார் நல்லாசிரியர் பகவான்.



தகுதியிருந்தும், பொருளாதார காரணங்களால் உயர்கல்வி பெற முடியாத மாணவர்களுக்கு அந்த வாய்ப்பைச் சாத்தியமாக்குகிறது அகரத்தின் 'விதை' திட்டம். இந்தத் திட்டத்துக்கான நேர்காணல் நடக்கும்போது, பல மாணவர்கள் பெற்றோர்களோடு வருவார்கள். சில மாணவர்களோடு அவர்களின் ஆசிரியர்களும் வருவார்கள். தன்னிடம் படித்த மாணவனுக்கு எப்படியாவது உயர்கல்வி வாய்ப்பு கிடைத்துவிட வேண்டும் என்ற துடிப்போடு வருகிற அந்த நல்லாசிரியர்களின் ஆர்வத்தில், எண்ணற்ற ஏழை மாணவர்களின் எதிர்காலம் பிரகாசமாகத் தெரியும்.

வகுப்பறையில் பாடம் சொல்லிக் கொடுப்பதோடு ஓர் ஆசிரியரின் பணி நிறைவடைவதில்லை. தன்னிடம் பயில்கிற மாணவர்கள் எந்தச் சூழலிலிருந்து வந்து படிக்கிறார்கள் என்பதை அறிவதும், அவர்கள் கல்வி கற்பதற்குத் தடையாக உள்ள விஷயங்களை மாணவர்களுடன் இணைந்து தகர்ப்பதும், நம்பிக்கை இழக்கிற மாணவர்களுக்கு உறுதுணையாக இருந்து வழிநடத்துவதும் ஆசிரியரின் முக்கிய பணி. எழுதப் படிக்கத் தெரியாத பெற்றோர்களின் பிள்ளைகளே அரசுப் பள்ளிகளில் அதிகம் படிக்கின்றனர். தனியார் பள்ளிகளில் பயில்கிற மாணவர்களுக்கு பெற்றோர்களின் வழிகாட்டலும், கல்வி கற்கத் தேவையான வசதி



வாய்ப்புகளும் எளிதில் கிடைக்கும். அங்கு ஆசிரியரின் பங்களிப்பு வகுப்பறையில் பாடம் நடத்துவதோடு நின்றுவிட்டாலும், தனியார் பள்ளி மாணவர்கள் தங்களுக்கான வாய்ப்புகளைத் தேடி அடைந்துவிட முடியும். அரசுப் பள்ளிகளில் அது சாத்தியமில்லை. அந்த மாணவர்களுக்கு இருக்கும் ஒரே வழிகாட்டி, ஆசிரியர்தான். அதனால், வகுப்பறை கடந்து அரசுப்பள்ளி மாணவர்களைப் புரிந்துகொள்பவரே நல்லாசிரியராகத் திகழ முடியும்.

ஏழ்மையும் வறுமையும் சுழற்றியடிக்கிற வாழ்விலிருந்து தங்களுக்கான விடியலை ஏழை மாணவர்கள் அரசுப் பள்ளிகளில்தான் தேடுகின்றனர். அந்த மாணவர்கள்மீது அன்பும் அக்கறையும் கொள்கிற ஆசிரியர்கள் கிடைத்துவிட்டால் போதும்... எல்லாத் தடைகளையும் கடந்து எளிதில் அரசுப்பள்ளி மாணவர்களால் வெற்றி பெறமுடியும். அதற்கான நிகழ்கால உதாரணமாகி இருக்கிறார் ஆசிரியர் பகவான்.

'மாணவர்கள் ஏன், உங்கள்மீது இவ்வளவு அன்பை வைத்திருக்கிறார்கள்?' என்ற கேள்விக்கு பகவான் சொல்லும் பதில் அற்புதமானது. ''என்னிடம் படிக்கும் ஒவ்வொரு குழந்தையையும் என் வீட்டுக்குழந்தை போல எண்ணுகிறேன். படிக்கவில்லை, வீட்டுப்பாடம் செய்யவில்லை என்றால் அதற்கான காரணத்தைக் கேட்பேன். பின்னர் அதை எப்படிச் சரிசெய்வது என்று யோசனை கூறி அந்தக் குழந்தைக்கு உதவுவேன். ஊர்த் திருவிழா, அவர்களின் குடும்பத்தில் நடக்கும் நிகழ்வுகள் குறித்து அவர்களுடன் உரையாடுவேன். அவர்களின் சோகமான தருணங்களில் நான் ஓர் அண்ணனாக இருக்கிறேன். என்னை நம்பி குழந்தைகள் அவர்களின் சந்தோஷங்களையும், பிரச்னைகளையும் பகிர்ந்துகொள்வார்கள்'' என்கிறார் பகவான்.

நல்ல ஆசிரியர்கள் கிடைக்கப்பெற்ற மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்றால், நல்ல மாணவர்கள் வாய்க்கப்பெற்ற ஆசிரியர்கள் பாக்கியவான்கள். நம்முடைய கல்விச்சூழலுக்கு ஒரு நல்லாசிரியர் பகவான் போதாது. ஒவ்வொரு ஆசிரியரும் பகவானாக இருப்பது அவசியம்.

அன்புடன்,

**சூர்யா**


# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்

மலர் 3 • இதழ் 3

ஜூலை 2018

கௌரவ ஆசிரியர்

**திரு.சூர்யா**

பதிப்பாளர் - ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com

# இந்திய உயர்கல்வியில் மாற்றம் தேவையா?

இந்தியாவின் உயர்கல்வி ஒழுங்குமுறை அமைப்பான பல்கலைக்கழக மானியக்குழு (University Grants Commission)வைக் கலைத்து விட்டு, அதற்கு மாற்றாக இந்திய உயர்கல்வி ஆணையத்தை (Higher Education Commission of India) அமைக்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்கான வரைவு மசோதாவை வெளியிட்டுள்ள மத்திய மனிதவள அமைச்சகம், இதுகுறித்த கருத்துகளைக் கேட்டிருக்கிறது. இம்மாதம் நடைபெறும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில் இதற்கான மசோதாவை நிறைவேற்றிவிட வேண்டும் என மத்திய அரசு வேகம் காட்டுகிறது.

சுதந்திர இந்தியாவின் உயர்கல்வி அமைப்பைத் தீர்மானிக்க யுனிவர்சிட்டி எஜுகேஷன் கமிஷன் என்ற அமைப்பு 1948ம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதன் தலைவராக இருந்த சர்வபள்ளி ராதாகிருஷ்ணனும், உறுப்பினர்களில் ஒருவராக இருந்த ஜாகீர் உசேனும் பிற்காலத்தில் இந்தியாவின் ஜனாதிபதியாக உயர்ந்தவர்கள். 1948 டிசம்பரில் டெல்லி பல்கலைக்கழகத்தில் முதல் கூட்டத்தை நடத்திய இந்த ஆணையம், ஒன்றரை ஆண்டுகள் இந்தியா முழுக்க இருக்கும் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று ஆலோசனை நடத்தி, இந்திய உயர்கல்விக்கான கொள்கைத் திட்டத்தை அளித்தது.

சாந்தி நிகேதன், ஸ்ரீநிகேதன் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பார்த்தும், டென்மார்க்கில் உள்ள மக்கள் கல்லூரியை முன்மாதிரியாகக் கொண்டும் புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்க பரிந்துரை செய்தது அந்த ஆணையம். அறியாமை இருளிலிருந்தும், ஏழ்மை நோயிலிருந்தும் இந்தியாவை மீட்டெடுக்கும் உயர்கல்வி முறையை இந்த ஆணையம் உருவாக்கியது. சுதந்திரமான, தொழில்சார்ந்த, தொழில்நுட்பக் கல்வித் திட்டத்தை இந்த ஆணையத்தில் இருந்த கல்வியாளர்கள் ஏற்படுத்திக்கொடுத்தனர்.

அந்த ஆணையத்தின் வழிகாட்டுதலில் பல்கலைக்கழக மானியக்குழு அமைக்கப்பட்டதில் தமிழகத்தின் பங்கு அளப்பரியது. சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையத்தில், ஆற்காடு லட்சுமணசாமி முதலியார் உறுப்பினராக இருந்தார். பல்கலைக்கழக மானியக் குழு எத்தகைய தன்மை கொண்டதாக இருக்கவேண்டும் என்பதை அவர்தான் தீர்மானித்தார். உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதோடு, உயர்கல்வியிலும், உயர்கல்வி நிர்வாகத்திலும் சமூகநீதியை உறுதி செய்ய வேண்டும் என்பதும் யு.ஜி.சி அமைக்கப்பட்டதன் நோக்கமாகும்.

எந்த நோக்கங்களுக்காக அது உருவாக்கப்பட்டதோ, அவற்றில் பல இன்னும் நிறைவேறவில்லை. யு.ஜி.சி அமைக்கப்பட்டு 62 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், உயர்கல்வி இன்னும் அனைவருக்கும் எளிதில்



கிடைக்கும் ஒன்றாக மாறவில்லை. இந்தியாவின் முதன்மைப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும், மத்தியப் பல்கலைக்கழகங்களிலும் சமத்துவமும் சமூகநீதியும் இன்னும் நிலைபெறவில்லை. யு.ஜி.சி–யில் இருக்கும் பலவீனங்களை சரிசெய்ய வேண்டியதுதான் அரசின் பணியாக இருக்க வேண்டும். மாறாக, அதைக் கல்வியாளர்கள் கையிலிருந்து பிடுங்கி, அதிகாரிகள் கையில் கொடுக்க நினைக்கிறது அரசு. உயர்கல்வி ஏழைகளுக்கு எட்டாக்கனியாகவே இந்த மாற்றம் வழி வகுக்கும்.

இந்திய உயர்கல்வி ஆணையம் என்பது, இந்தியா போன்ற ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த நாட்டில் சமூகநீதியை நிலைநிறுத்தும் விதமான அமைப்பாக இருக்காது. உயர்கல்வி நிறுவனங்களுக்கு இப்போது இருக்கும் சுயேச்சைத்தன்மையை காலி செய்துவிட்டு, நேரடியாக அரசின் கட்டுப்பாட்டில் அவற்றைக் கொண்டுவருகிறது புதிய சட்டம்.

யு.ஜி.சி கல்வியாளர்கள் அமைப்பாக செயல்பட்டு வந்தது. ஆனால், இந்திய உயர்கல்வி ஆணையம் முழுக்க அதிகாரிகளைக் கொண்ட அரசியல் அமைப்பாக மாற்றப்படும் ஆபத்து உள்ளது. யு.ஜி.சி–யில் தலைவர், துணைத் தலைவர் உள்ளிட்ட 12 உறுப்பினர்கள் இருப்பர். அவர்கள் அனைவரும் கல்வியாளர்கள். மேலும் மானியம் வழங்குதல் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான அனைத்து அதிகாரங்களும் யு.ஜி.சி–க்கு இருக்கிறது. ஆனால், இந்திய உயர்கல்வி ஆணையத்துக்கு மானியம் வழங்கும் அதிகாரம் இல்லை. அதை மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் பறித்துக் கொண்டது. அதேநேரத்தில் உயர்கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான கட்டற்ற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் மேலாக உயர்கல்வி ஆணையத்தில் இடம்பெறும் தலைவர், துணைத்தலைவர் உள்ளிட்ட 14 உறுப்பினர்களில் நான்கு பேர் மட்டுமே கல்வியாளர்களாக இருப்பார்கள்; மற்றவர்கள் அதிகாரிகள்.

யு.ஜி.சி உறுப்பினர்களை அரசு நினைத்த நேரத்தில் நீக்க முடியாது. அதனால் கல்வியாளர்கள் யாருக்கும் அஞ்சாமல் சீர்திருத்தங்களைச் செய்து வந்தனர். ஆனால், புதிய அமைப்பில் உள்ள 14 பேரையும் மத்திய அரசு எப்போது வேண்டுமானாலும் நீக்க முடியும். சுயேச்சைத்தன்மையற்ற இந்த அமைப்பு, பல்கலைக்கழகங்களை பலவீனமாக மாற்றும். அரசின் முடிவுகளை ஒரு பல்கலைக்கழகம் ஏற்க மறுத்தாலோ, எதிர்ப்பு தெரிவித்தாலோ அதன் அங்கீகாரத்தை உயர்கல்வி ஆணையத்தால் நீக்க முடியும். இதனால் இந்தியாவிலுள்ள எந்த பல்கலைக்கழகமும் சுதந்திரமாக செயல்பட முடியாது;

அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் ஆராய்ச்சி உள்ளிட்ட பணிகளுக்காக யு.ஜி.சி நியாயமான முறையில் நிதி ஒதுக்கீடு செய்த நிலை மாறி, தாங்கள் விரும்பும் பல்கலைக்கழகங்களுக்கு மட்டும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யும் நிலை வரும். பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யும் அதிகாரம் இப்போது யு.ஜி.சி வசம் உள்ளது. புதிய அமைப்பிடமிருந்து இது பறிக்கப்பட்டு, மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் 10 உறுப்பினர்கள் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் சரியான முடிவல்ல. பல்கலைக்கழகங்கள் மீதான மாநில அரசுகளின் அதிகாரங்களையும் உயர்கல்வி ஆணையம் பறிக்கும்.

உயர்கல்வியை வழங்கும் பல்கலைக்கழகங்களின் நிர்வாக அமைப்பு தனித்துவமானது. மாணவர்களுக்கு உயர்கல்வியை வழங்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளது; அதற்கு அரசுதான் செலவழிக்க வேண்டும். ஆனால் அந்தப் பல்கலைக்கழகங்கள் அரசின் இறுக்கமான கட்டுப்பாட்டில் இல்லாமல் சுதந்திரமாக செயல்பட வேண்டும். பண்டைய காலத்தில் நாளந்தா, தட்சசீலம் போன்ற இடங்களில் செயல்பட்ட இந்தியாவின் பழம்பெருமை வாய்ந்த பல்கலைக்கழகங்கள் இப்படித்தான் நிர்வகிக்கப்பட்டன. அதிகாரமும் பணபலமும் பொருந்திய அரசிடமிருந்து பல்கலைக்கழகங்களைப் பாதுகாப்பதே யு.ஜி.சி என்ற அமைப்பின் கடமையாக இருந்தது.

ஆனால், இப்போது உலகெங்கிலுமே பல்கலைக்கழகங்கள் சேவை அமைப்புகள் என்ற பாதையிலிருந்து விலகி வருகின்றன. உயர்கல்வி தரவேண்டிய தன் கடமையிலிருந்து அரசுகள் விலக நினைக்கின்றன. எல்லா தேவைகளுக்கும் பல்கலைக்கழகங்கள் தாங்களாகவே நிதி திரட்டிக்கொள்ள வேண்டும் என அரசுகள் எதிர்பார்க்கின்றன. ‘உயர்கல்வி நிறுவனம் சுயேச்சையாக செயல்பட வேண்டும்’ என இனிக்கும் வார்த்தைகளால் இது வலியுறுத்தப்படுகிறது. இதனால் பேராசிரியர்கள் தேர்வுகளிலோ, மாணவர் சேர்க்கையிலோ சமூகநீதி இல்லாமல் போய்விடும். கல்விக்கட்டணம் உயரும். அடித்தட்டுக் குடும்பங்களின் வாரிசுகளுக்குக் கல்வி மறுக்கப்படும்.

இதுபோன்ற ஆபத்து இந்தியாவிலும் வந்துவிடக்கூடாது என்பதே கல்வியாளர்களின் கவலை. எனவேதான், யு.ஜி.சி–யை ஒழித்துவிட்டு இந்திய உயர்கல்வி ஆணையத்தை உருவாக்குவதற்கு முன்பாக கல்வியாளர்கள் மத்தியில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள்.

யு.ஜி.சி என்ற அமைப்பு இந்தியாவின் உயர்கல்விச் சூழலை நவீன கால மாற்றங்களுக்கு ஏற்றபடி மாறுதலுக்கு உட்படுத்தாத அமைப்பாக இருக்கலாம். ஆனால், அதற்கு மாற்றாக வரும் அமைப்பு அதைவிட உன்னதமானதாக இருக்க வேண்டும். ●

# தூக்கத்தைத் துறந்து படி!




கொரியப் போர் முடிந்தபோது, உலகின் ஏழை நாடுகளில் ஒன்றாக இருந்தது தென் கொரியா. இயற்கை வளங்கள் எதுவும் இல்லை; பெரிய தொழிற்சாலைகளும் இல்லை. 'கல்விதான் நம் நாட்டை முன்னேற்றும்' என்பதை உணர்ந்த ஆட்சியாளர்கள், அதற்காக பெரும் முதலீட்டைச் செய்தனர். நாட்டின் ஒட்டுமொத்த வருவாயில் 4.7 சதவிகிதம் அளவு கல்விக்காகச் செலவிடப்பட்டது. ஆசிய நாடுகளில் மிக அதிக முதலீடு! இரண்டே தலைமுறைகளில் இனிய மாற்றம்... உலக அளவில் கல்வியில் முதலிடம் பிடித்திருக்கும் நாடு என்ற பெருமையை எட்டிப் பிடித்திருக்கிறது தென் கொரியா.

சியோல் தேசியப் பல்கலைக்கழகம், கொரியா பல்கலைக்கழகம் மற்றும் யோன்சீ பல்கலைக்கழகம் ஆகிய மூன்று டாப் பல்கலைக்கழகங்களில் இடம்பிடிக்க மாணவர்கள் மத்தியில் கடும் போட்டியே நடக்கிறது. இவற்றில் சேர்ந்துவிட்டால் போதும்... அரசு வேலை, வங்கி வேலை, சாம்சங், ஹூண்டாய் மற்றும் எல்.ஜி போன்ற நிறுவனங்களில் வேலை நிச்சயம். இந்த ஆசிய தேசத்தில் கல்வியறிவு 99.9 சதவிகிதம். முறையாகப் படித்து பட்டம் பெறாதவர்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகக் கருதப்படுவார்கள். அவர்களுக்கு வேலை கிடைப்பதோ, திருமணம் நடப்பதோ கஷ்டமான விஷயம்.

உலக நாடுகளின் கல்வித்தரத்தை மதிப்பிடும் NJ MED என்ற ஆய்வில் தென் கொரியா தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக முதலிடம் பிடித்திருக்கிறது. பள்ளியில் குழந்தைகளைச் சேர்ப்பதில் தொடங்கி, பெற்றோர்களின் ஒத்துழைப்பும் ஆசிரியர்கள் பாடம் நடத்தும்விதமும் சேர்ந்து இதை சாத்தியமாக்கியுள்ளது.

தென் கொரியாவில் கின்டர் கார்டன் சேர்ப்பது கட்டாயமில்லை. பெரும்பாலான பெற்றோர் குழந்தைகளை வீட்டிலேயே வைத்திருக்கவே விரும்புகின்றனர். இப்போதுதான் ஆங்காங்கே கின்டர் கார்டன் பள்ளிகளை ஆரம்பித்து ஆங்கிலம் சொல்லித்தர ஆரம்பித்திருக்கின்றனர். ஆனாலும், நிறைய பேர் இங்கு குழந்தைகளை அனுப்புவதில்லை. காரணம், 'பள்ளியில் சேர்த்தபிறகு குழந்தைகளுக்கு வளர்ந்து வேலைக்குப் போகும்வரை ஓய்வே கிடைக்காது. இந்த வயதிலாவது ஓய்வெடுக்கட்டுமே' என்ற நினைப்புதான்.

6 வயதில் கொரியாவில் கட்டாயக் கல்வி ஆரம்பிக்கிறது. ஆறு ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆரம்பப்பள்ளியில் படிக்க வேண்டும். அரசுப்பள்ளிகளே அங்கு அதிகம். சில தனியார் பள்ளிகள் உண்டு. அவற்றுக்கும் அரசு நிதி தருகிறது. ஆங்கிலம், கொரிய மொழி, கணிதம், அறிவியல், சமூக அறிவியல், நீதி போதனை, நுண்கலைகள், இசை, உடற்பயிற்சி



என ஏராளமான பாடங்கள். எல்லாவற்றையும் ஒரே ஆசிரியர்தான் சொல்லித் தருவார். இந்த வயதிலேயே நிறைய குழந்தைகளை ஆங்கில டியூஷன் சேர்த்துவிடுகிறார்கள். இந்தியா போலவே 'ஆங்கில அறிவுதான் நல்ல வேலை பெற்றுத் தரும்' என்ற நம்பிக்கை தென் கொரியாவில் ஆழமாக இருக்கிறது. அதனால், அந்த மொழிக்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள்.

ஆறு ஆண்டுகள் ஆரம்பக் கல்விக்குப் பின் மூன்று ஆண்டுகள் நடுநிலைப் பள்ளியில் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் பள்ளி விதிகள் கடுமையாகிவிடும். யூனிஃபார்ம், ஹேர்கட், பள்ளிக்கு உரிய நேரத்தில் வருவது எல்லாவற்றுக்கும் படிப்பைப் போலவே முக்கியத்துவம் தரப்படும். எல்லாப் பாடங்களுக்கும் தனித்தனி ஆசிரியர்கள் வருவார்கள். இதுதவிர இந்த வயதிலேயே குழந்தைகளை டியூஷனும் சேர்த்துவிடுகிறார்கள். 'ஹக்வான்' எனப்படும் இந்த டியூஷன் முறை தென் கொரியாவில் மிகவும் பிரபலம். 95 சதவிகிதக் குழந்தைகள் டியூஷன் போகிறார்கள். கணிதம், அறிவியல், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்குத்தான் டியூஷன். நிறைய பெற்றோர்கள் பள்ளிக்கல்வியைவிட டியூஷனுக்கே முக்கியத்துவம் தருகிறார்கள். இதனால் நிறைய குழந்தைகள் இருட்டியபிறகே வீட்டுக்கு வருகிறார்கள். தென் கொரியக் குடும்பங்கள் தங்கள் வருமானத்தில் 20 சதவிகிதத்தை டியூஷனுக்கு செலவிடுவதாக ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. உலகிலேயே இப்படி தனிப்பயிற்சிக்கு அதிகம் செலவிடும் நாடு தென் கொரியாதான்.

நடுநிலைப் பள்ளியை முடித்ததும் உயர்நிலைக் கல்வி மூன்று ஆண்டுகள். ஒரு கொரிய மாணவனின் வாழ்க்கையில் மிக முக்கியமான பருவம், இந்த மூன்று ஆண்டுகள்தான். இந்த மூன்று ஆண்டுகள் நன்கு படித்தால்தான், கொரியாவின் ஆறு பல்கலைக்கழகங்களில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்து பட்டம் படிக்க இடம் கிடைக்கும். அதற்கு போட்டி கடுமையாக இருக்கும் என்பதால், உயர்நிலைக் கல்வியில் கடும் உழைப்பைக் கொடுக்க வேண்டியிருக்கும்.

உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லும் ஒரு மாணவன், அதிகாலை 5 மணிக்கு எழுந்து வீட்டிலிருந்து கிளம்ப வேண்டியிருக்கும். காலை டிபன், மதிய சாப்பாடு இரண்டுமே பள்ளியில். மாலை 4 மணிக்கு வகுப்புகள் முடியும். அதன் பிறகு 'மாலைநேர சுய படிப்பு'. பள்ளியில் நூலக அறை போன்ற ஏதோ ஓர் அறையில் அமர்ந்து படிக்க வேண்டும். 'யஜா' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இதை 'சுய படிப்பு' என்று சொன்னாலும், எல்லா மாணவர்களும் கட்டாயம் பள்ளியில் அமர்ந்துதான் படிக்க வேண்டும். இரவு உணவையும் பள்ளியிலேயே கொடுத்துவிடுவார்கள். படித்து முடித்துவிட்டு இரவு 10 மணிக்கு வீட்டுக்குப் போகலாம்.

அதன்பிறகு வீட்டில் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு டியூஷனுக்குப் போக வேண்டும். டியூஷன் முடிந்து அதிகாலை 2 மணிக்கு வீட்டுக்கு வந்து தூங்கலாம். திரும்பவும் 5 மணிக்கு எழுந்து புதிய நாளின் கல்வியைத் தொடர வேண்டும். கொரியாவில் இயல்பாக சொல்லப்படும் அறிவுரை, 'தினமும் 3 மணி நேரம் மட்டும் தூங்கினால், நல்ல பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கும். 4 மணி நேரம் தூங்கினால் வேறொரு பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கும். ஐந்து மணி நேரத்துக்கு மேல் தூங்கினால் உயர்கல்வியை மறந்துவிட வேண்டியதுதான்.'

கொரியாவில் ஆரம்பக் கல்வியும், நடுநிலைக் கல்வியும் கட்டாயம். உயர்நிலைக் கல்வி அப்படி இல்லை. ஆனாலும், 97 சதவிகிதக் குழந்தைகள் உயர்நிலைக் கல்வியை முடிக்கின்றனர். உலகிலேயே கொரியாவில்தான் இது அதிகம்.





உயர்நிலையில் கல்வி இரண்டுவிதமாகப் பிரிக்கப்பட்டு விடுகிறது. பல்கலைக்கழகத்தில் சேரும் உத்தேசத்தோடு இருக்கும் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போகலாம். மற்றவர்களுக்கு தொழிற்கல்விப் பிரிவுகள் உள்ளன. நடுநிலைப் பள்ளி முடிப்பவர்களில் நான்கில் ஒரு மாணவர் இந்தத் தொழிற்கல்விக்குப் போய்விடுகிறார். வணிகம், பொருளாதாரம், தொழில்நுட்பம், மீன் வளம் மற்றும் விவசாயத் தொழில்நுட்பம் ஆகியவை இந்தத் தொழிற்கல்வியில் வருகின்றன. ஜெர்மனி மாடலில் இந்தத் தொழில் பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. உற்பத்தித் துறையில் இருக்கும் சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு திறமையான தொழிலாளர்களை உருவாக்கித் தருவது இந்தப் பள்ளிகளின் பணி.

உயர்நிலைப் பள்ளியில் மகனோ, மகளோ நல்ல மதிப்பெண் வாங்கவேண்டும் என்பதற்காக குடும்பமே தூக்கத்தை மறந்து உழைக்கும். அலுவலகத்துக்கு லீவ் போட்டுவிட்டு, கடைகளை மூடிவிட்டு பிள்ளைகளோடு நேரத்தைச் செலவிடுவார்கள். பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வில் வெற்றி பெறுவது என்பது வாழ்க்கையில் மகத்தான விஷயம். அடித்தட்டு குடும்பத்துப் பிள்ளைக்கு இந்த வாய்ப்பு கிடைத்துவிட்டால், குடும்பம் உடனே மிடில் கிளாஸ் அந்தஸ்துக்கு வந்துவிடும். நல்ல வேலை கிடைக்கும், சமூக அந்தஸ்து உயரும், திருமணத்துக்கு நல்ல வரன் அமையும். கல்விதான் வாழ்க்கையை உயர்த்தும் என்பது தென் கொரிய சமூகத்தில் ஆழமான நம்பிக்கையாக இருக்கிறது.

பள்ளிக் காலத்திலேயே தினமும் பல மணி நேரம் படிப்பதால், தென் கொரிய மாணவர்கள் சர்வதேசத் தேர்வுகளை சர்வசாதாரணமாக எழுதுகிறார்கள். அமெரிக்காவில் பட்டம் படிக்கும் மாணவர் நீண்ட நேரம் எடுத்துக்கொண்டு செய்து முடிக்கும் கணக்குகளை, கொரிய மாணவர்கள் நிமிடங்களில் முடிக்கிறார்கள். அமெரிக்க அதிபராக இருந்த பாரக் ஒபாமா இங்கு வந்து பார்த்துவிட்டு, ''தென் கொரியாவில் இருப்பதுபோன்ற கல்வித்திட்டம் உலகத்துக்கே தேவை'' என்றிருக்கிறார். பிரிட்டிஷ் கல்வி அமைச்சர்கள், 'தென் கொரிய மாடலில் நம் கல்விமுறையை மாற்ற வேண்டும்' என்று பரிந்துரை செய்கிறார்கள்.

இப்படி உலகமே பாராட்டினாலும், தென் கொரியக் கல்விமுறையை விமர்சனம் செய்பவர்களும் இருக்கிறார்கள்.

'இளம் வயதில் தூக்கமே இல்லாமல் தொடர்ந்து தினமும் பல மணி நேரம் பள்ளியில் இருப்பதும் டியூஷன் போவதும், கல்வி சார்ந்த மன அழுத்தத்தை பிள்ளைகளுக்கு ஏற்படுத்துகிறது' என்பது மிக முக்கியமான குற்றச்சாட்டு. ''குழந்தைகளின் இயல்பான உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு இந்தக் கல்விமுறை உதவவில்லை'' என்பது சர்வதேச உளவியலாளர்களின் கருத்தாக இருக்கிறது. தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் மிக அதிகமான தற்கொலை விகிதம் கொண்ட நாடு என்ற மோசமான தகுதியை இதனால் தென் கொரியா பிடித்திருக்கிறது.

இன்னொரு பக்கம், 'தேவைக்கு அதிகமாக பட்டதாரிகளை உருவாக்கி, வேலையில்லாத் திண்டாட்டம் பெருக இந்தக் கல்விமுறை காரணமாகிவிட்டது' என்ற வாதமும் வைக்கப்படுகிறது. உயர்நிலைக் கல்வியை முடிப்பவர்களில் 80 சதவிகிதம் பேர், ஏதோ ஒரு பல்கலைக்கழகத்தில் அல்லது தொழிற்கல்விக்கூடத்தில் சேர்கின்றனர். கொரியாவில் 25 வயது முதல் 34 வயது வரை உள்ளவர்களில் 68 சதவிகிதம் பேர் ஏதோ ஒரு பட்டம் முடித்திருக்கின்றனர். வளர்ந்த நாடுகளில் இந்த எண்ணிக்கை தென் கொரியாவில்தான் அதிகம். இப்படி அதிகம் படித்திருக்கும் பலர் வேலைவாய்ப்பு இல்லாமல் தவிக்க, சாதாரண வேலைகளைச் செய்வதற்கு ஆட்களே இல்லை. இதனால் தொழிற்கல்விக்கூடங்களின் எண்ணிக்கையை சமீபத்தில் அதிகரித்திருக்கிறது தென் கொரியா.

படிப்பு முக்கியம்தான். ஆனால், படிக்கும் இயந்திரங்களாகக் குழந்தைகளை மாற்றிவிடக் கூடாது. ●



MHRD, Govt. of India, has ranked

# VIT as the best private engineering institution

in the country.

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வி.ஐ.டியை நாட்டின் தலை சிறந்த தனியார் பொறியியல் கல்வி நிறுவனமாக தேர்ந்தெடுத்துள்ளது.

In a ranking done for the first time ever by the NIRF (National Institutional Ranking Framework) of MHRD, VIT has been ranked 13$^{th}$ overall and 1$^{st}$ among private institutions under 'Engineering institutions' category.

VIT has also been ranked 17$^{th}$ overall and 7$^{th}$ among private institutions under 'Management institutions' category.

## LEADING IN RESEARCH

**in number of publications**

By publishing 2233 research articles in Scopus indexed journals in 2015, VIT has surpassed all the other institutions in India

[Source: Scopus database as on 6.4.2016]

*We thank all our faculty, staff, students, alumni and well-wishers !!*

VIT®
UNIVERSITY
(Estd. u/s 3 of UGC Act 1956)

VELLORE ▪ CHENNAI

www.vit.ac.in

VIT - A place to learn; A chance to grow

# அகரம் நிகழ்வுகள்

## பனை நடல்!

நமது 'யாதும் ஊரே' அமைப்பு திருநெல்வேலி மாவட்டத்தின் காவல் கிணறு பகுதியில் மரங்களை நட்டு வருகின்றது. காவல் கிணறு தேரி, சுமார் நூறு ஏக்கருக்கு மேல் பரப்பளவுள்ள பகுதி ஆகும். இங்கிருந்து செம்மண் எடுக்கப்பட்டு பல்வேறு இடங்களுக்குக் கொண்டுசென்று விற்கப்படுகிறது. இதைத் தடுத்து பசுமையான தேரியை உருவாக்குவதுதான் நமது முக்கியமான நோக்கம்.

'யாதும் ஊரே' அமைப்பும், அங்குள்ள தன்னார்வலர்களும் முனைப்புடன் செயல்பட்டு சுமார் 5,000 பனை விதைகளை இந்தத் தேரியில் நட்டுள்ளனர். இவைதவிர, 200க்கும் மேற்பட்ட பல வகையான மரங்களையும் நட்டுள்ளனர். இவை விரைவில் வளர, மரக்கம்புகளையும் ஊன்றியுள்ளனர். மரங்களுக்கு வாரம் ஒருமுறை நீர் ஊற்றிப் பராமரிக்கப்படுகிறது.







## கற்றல் பயிற்சிப் பட்டறை!

அகரம் விதை திட்டத்தில் 2016ம் ஆண்டு கல்லூரியில் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை சத்யபாமா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. ஜூன் 23 மற்றும் 24ம் தேதிகளில் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில் களத்துக்குச் சென்றும் அனைவரும் கற்றுக்கொண்டனர்.

திருநின்றவூர் நல்ல கீரை திரு. ஜெகன் என்பவரின் கீரைப் பண்ணையில் கற்றல் துவங்கியது, இயற்கை வேளாண்மையில் தனது பண்ணையில் வளர்க்கப்படும் அனைத்து கீரைகளின் பெயர், பயன் மற்றும் மருத்துவ குணங்களை ஜெகன் விளக்கினார். அடுத்தபடியாக திரு. இளங்கோ கல்லானை, விவசாயத்தின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு உணர்த்தினர். அதனைச் சார்ந்து அவரது வாழ்கை அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார். இதைத் தொடர்ந்து திருமிகு. ரோசி, ஒரு தொழிலை சமூகம் சார்ந்து எப்படிச் செய்வது என்று விளக்கினார்.

இரண்டாம் நாள் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பொம்மலாட்டம் நடைபெற்றது. இயற்கை விவசாயம் மற்றும் ரசாயனங்களின் தீமைகள் பற்றி பொம்மலாட்டம் மூலம் மாணவர்களுக்கு உணர்த்தப்பட்டது. இதைத் தொடர்ந்து வாசிப்பின் பயன் பற்றி மாணவ, மாணவிகளுக்கு உணர்த்தப்பட்டது.

# ஸ்ரீசிவகுமார் கல்வி அறக்கட்டளை விழா

நடிகர் திரு. சிவகுமார் அவர்கள், தனது அறக்கட்டளை மூலம் கடந்த 39 ஆண்டுகளாக +2 தேர்வில் நல்ல மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கும், விளையாட்டு, கலை மற்றும் புதிய கண்டுபிடிப்பு போன்றவற்றில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கும் பரிசளித்து, பாராட்டி, கௌரவித்து வருகிறார். மாணவர்களை ஊக்கப்படுத்த தமது 100வது படத்தின்போது, சிவகுமார் கல்வி அறக்கட்டளையைத் தொடங்கினார் திரு. சிவகுமார். கடந்த 39 ஆண்டுகளாக இந்த அறப்பணியைத் தொடர்ந்து செய்துவருகிறார்.

இந்த ஆண்டுக்கான நிகழ்வு, சென்னை வடபழனி பிரசாத் லேபில் நடைபெற்றது. விழாவில் 21 மாணவ, மாணவிகளுக்கு மொத்தம் ரூ. 2,05,000 பரிசளிக்கப்பட்டது. இதுதவிர திண்டிவனம் கல்வி மேம்பாட்டுக் குழு நடத்தும் ஏழை மாணவர்களுக்கான தாய்த்தமிழ்ப் பள்ளிக்கு ரூ. 1 லட்சமும், முதல் தலைமுறையாக படிக்கும் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடும் வாழை இயக்கத்துக்கு ரூ. 1 லட்சமும் வழங்கப்பட்டது. மேலும் அறிவியல் துறையில் சிறந்து விளங்கி வரும் மாணவர்களுக்கும், விளையாட்டுத் துறையில் சாதனை படைத்த மாணவர்களுக்கும் பரிசு கொடுக்கப்பட்டது.




கராத்தேவில் மாநில அளவில் தங்கப் பதக்கம் பெற்ற வேலூர் மாணவி சுவாதி, அரசுப் பள்ளியில் படித்து முதல் மதிப்பெண் எடுத்த கார்த்தி, ரயில் விபத்துகளை அறிந்து தடுக்கும் கருவியைக் கண்டறிந்த கௌதம், மலைப்பகுதியில் போக்குவரத்து வசதி இல்லாததால் ஏற்படும் ஆற்றல் இழப்பு பற்றி ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்து தேசிய அளவில் இளம் விஞ்ஞானி பட்டம் பெற்ற சின்னகண்ணு ஆகியோர் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் திரு. எஸ்.ஆர்.பிரபு அனைவரையும் வரவேற்றார். திரு. சிவகுமார், "31 ஆண்டுகள் என் பொறுப்பில் இயங்கிய அறக்கட்டளையை, அதன்பிறகு அகரம் பவுண்டேஷன் பொறுப்பேற்று சிறப்பாகக் கல்விப் பணி செய்து வருகிறது. சிறிய அளவில் ஏழை மாணவர்களுக்கு செய்த உதவியை, என் பிள்ளைகள் இப்போது நல்ல முறையில் செய்து வருகிறார்கள். கல்வி ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை எந்த அளவுக்கு உயர்த்தும் என்பதை நான் அனுபவப்பூர்வமாக உணர்ந்திருக்கிறேன். என்னைப் போல ஏழைக் குடும்பத்தில் பிறந்து நன்றாகப் படிக்கிற பிள்ளைகளுக்கு என்னால் முடிந்த உதவியைச் செய்வதில் மிகுந்த மனநிறைவு அடைகிறேன். மாணவர்கள் தங்களது கவனம் சிதறாமல் தொடர்ந்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்" என்று கூறினார்.

விழாவில் மாணவர்களுக்கு பரிசளித்துப் பேசிய அகரம் பவுண்டேஷன் நிறுவனர் நடிகர் திரு. சூர்யா, "ஒரு செயலைத் துவங்குவது பெரிய விஷயம் இல்லை. தொடங்கிய காரியத்தைத் தொடர்ந்து நடத்துவதுதான் பெரிய விஷயம். அப்பாவிடம் நாங்கள் கற்றுக்கொண்ட முக்கியமான பாடம் இது. ஆரம்பிக்கும் முன்பு ஆயிரம் முறை யோசிப்பார். ஆரம்பித்து விட்டால், அது தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று பாடுபடுவார். 39 வருடமாக நடக்கும் இந்த நிகழ்வு இதற்கு ஒரு முக்கிய உதாரணம்.

அகரம் பவுண்டேஷன், அடித்தட்டு மக்களின் கல்வி வளர்ச்சிக்கு தன்னால் முடிந்த பணிகளைச் செய்து வருகிறது. இந்த ஆண்டோடு அகரம் அறக்கட்டளை மூலம் உயர்கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 2,500 பேராக உயர்கிறது. தகுதியுள்ள ஏழை மாணவர்களின் கல்லூரிக் கனவை, நல்ல உள்ளம் கொண்ட பலரின் உதவியோடு நனவாக்கி இருக்கிறோம். தமிழகத்தின் தரம்வாய்ந்த பல கல்வி நிறுவனங்கள், அகரம் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் இலவசமாகப் படிக்க வாய்ப்பு தருகின்றன. தரமான கல்வி ஏழை மாணவர்களுக்குக் கிடைக்கக் கரம் கோர்த்து உதவும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்" என்றார்.

சிவகுமார் அவர்களின் மகள் திருமிகு. பிருந்தா, நிகழ்ச்சியை இறை வணக்கம் பாடித் தொடங்கி வைத்தார். அகரம் மாணவர்கள் இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர்.



## அசத்தும் அரசுப் பள்ளி



# “எல்லாக் குழந்தைகளும் கற்கப் பிறந்தவர்களே!”



கற்பிக்கும் முறைக்காகவும் நவீன வசதிகளுக்காகவும் தனியார் பள்ளிகளை நாடி எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் பல அரசுப் பள்ளிகள் முன்னுதாரணமாக உயர்ந்து கொண்டிருக்கின்றன. சென்னை முகப்பேரில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளி இந்தப் பட்டியலில் முக்கியமான ஒன்று. இந்தப் பள்ளியின் முன்னுதாரண செயல்பாடுகளைக் காணும் எவருக்கும், தங்கள் குழந்தையை இங்கு சேர்த்து படிக்க வைக்கும் ஆவல் ஏற்படும்.

இதை உதாரணப் பள்ளியாக உயர்த்தியதில் தலைமையாசிரியர் வேணி ராமச்சந்திரனின் பங்கு முதன்மையானது. ஒரு பள்ளி சரியாகச் செயல்பட அதன் ஆசிரியர்கள் சரியான வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். வேணி தன் 30 ஆண்டு கால பணி அனுபவத்தில் தான் கற்றதைக் கொண்டு, இப்பள்ளி குழந்தைகளுக்கு சிறப்பான வழிகாட்டியாக இருக்கிறார்.

‘‘எங்களுக்குக் கேரளா பூர்வீகம். ஆனால், படித்தது, வளர்ந்தது இங்கேதான். 1989-ம் ஆண்டு என்னுடைய 19 வயதில் ஆசிரியர் பணியில் சேர்ந்தேன். மீஞ்சூர் அருகே உள்ள ஒரு குக்கிராமத்தில் முதல் பணி. அந்த வயதில் எனக்கு சமூக அறிவோ, அனுபவமோ கிடையாது. முதன்முதலாக சாதிப் பாகுபாட்டை அங்குதான் கேள்விப்பட்டேன். அடித்தட்டு மக்களின் குழந்தைகள் அந்தப் பள்ளியில் படித்தார்கள். சாதி ஏற்றத்தாழ்வு இருந்ததோடு, அந்தக் குழந்தைகளின் சூழல் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. நீண்ட தூரத்தில் இருந்ததால், அந்தப் பள்ளியில் என்னால் பணியைத் தொடர முடியவில்லை. இப்போதும்கூட மனதளவில் குற்றவுணர்ச்சி இருக்கிறது; அந்தக் குழந்தைகளை அப்படியே விட்டுவிட்டு வந்துவிட்டோமே என்று.

அந்தக் குழந்தைகளைப் போன்ற சூழ்நிலையில்தான் இங்கும் இருக்கிறார்கள். இங்கே படிக்கிற 90 சதவிகிதக் குழந்தைகள் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர்கள். 2009-ம் ஆண்டு தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்று இங்கு வந்தேன். பள்ளிக்கு வரும் குழந்தைகளின் நிலை படுமோசமாக இருந்தது. பெரும்பாலும் கழிப்பிட வசதியோ, குளிப்பறை வசதியோ இல்லாத சூழலில் வாழும் குடும்பங்களிலிருந்தே எங்கள் பள்ளிகளுக்குக்

குழந்தைகள் வருகிறார்கள். பள்ளியில் அளிக்கும் ஒரு வேளை உணவுதான் பெரும்பாலானவர்களின் பிரதான உணவாக இருக்கும்.

இவர்களின் சமூகச்சூழல்தான் என்னை மிகவும் பாதித்தது. முதல் பணியாக பள்ளியில் குழந்தைகளுக்கு குளிப்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தேன். காலையில் பள்ளிக்கு வந்தவுடன் அவர்களைக் குளிக்க வைப்போம். எங்கள் ஆசிரியர்கள் முகம் சுளிக்காமல் குளிக்க வைத்தார்கள். பிறகு குழந்தைகளே பழகிக்கொண்டார்கள். அடுத்து மதிய உணவை சுவையானதாகவும் சத்தானதாகவும் மாற்றினோம். புறத் தூய்மையும் நல்லுணவும் கிடைத்தபிறகு அவர்கள் கல்வி அறிவிலும் சிறந்தவர்களாக உருவானார்கள். அடித்தட்டுக் குழந்தைகளுக்கு கல்வி வராது என்கிற கட்டுக்கதை இருக்கிறது இல்லையா, அதை எங்கள் பள்ளிக்குழந்தைகள் உடைத்தார்கள். இவர்களிடம் எத்தனை திறமைகள் புதைந்திருக்கின்றன தெரியுமா?'' என்று பெருமிதத்துடன் ஆசிரியர் வேணி சொன்னபோது, அந்தப் பெருமிதத்தை முழுமையாக உணர முடிந்தது.

சமூக ஒதுக்குதலைக் காலம்காலமாகக் கண்ட குழந்தைகள், முதல் தலைமுறையாக கல்வி கற்க வரும்போது, அவர்களை அரவணைத்துச் செல்லும் கல்விச்சூழல் முக்கியமாகத் தேவை. அத்தகைய சூழலை ஏற்படுத்திக் கொடுக்க முயற்சி செய்து, அதில் வெற்றியும் கண்டிருக்கிறார் வேணி. 'தன்னுடன் பணியாற்றும் சக ஆசிரியர்களின் துணை இல்லாமல் எதுவும் சாத்தியமாகி இருக்காது' என்பதை அடிக்கடி நினைவுகூர்கிறார்.

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள இந்தத் தொடக்கப்பள்ளியில் 99 குழந்தைகள் படிக்கிறார்கள். கே.ஜி வகுப்புகளையும் இவர்கள் நடத்துகிறார்கள். ஆனால், சம்பளம் தருவது அரசு அல்ல; தலைமை ஆசிரியர் வேணியும் மேலும் இரு ஆசிரியர்களும் இணைந்து ஓர் ஆசிரியரை நியமித்து, அவருக்கு சம்பளமும் கொடுத்து மழலையருக்கான வகுப்புகளை நடத்தி வருகிறார்கள். இதில் 22 குழந்தைகள் படிக்கிறார்கள். ''மழலை வயதில் வேறுவழியில்லாமல் தனியார் பள்ளியில் சேர்க்கும் நகரத்துப் பெற்றோர்களின் சூழலைக் கருத்தில் கொண்டும், அரசுப் பள்ளியில் மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்கவும் இந்த ஏற்பாட்டைச் செய்தோம்'' என்று சொல்கிறார் வேணி. கல்வி அலுவலர்களின் அனுமதியைப் பெற்று, நன்கொடையாளர்களின் உதவியுடன் கடந்த ஐந்தாண்டுகளாக மழலையர் வகுப்புகளை நடத்திவருகிறார்கள்.



மற்ற பள்ளிகளில் படிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆட்டிசம் பாதிப்புக்குள்ளான குழந்தைகளை இங்கே சேர்த்து நன்கு படிக்க வைத்ததை தங்களுடைய பள்ளியின் சிறப்பான செயல்பாடாக வேணி சொல்கிறார்.

''தனியார் பள்ளிகளால் நிராகரிக்கப்பட்ட தங்கள் குழந்தையை அழைத்து வந்திருந்தார்கள் அந்தப் பெற்றோர். 'சேர்த்துக்கொண்டால் போதும்; எதுவும் சொல்லித்தரவெல்லாம் தேவையில்லை' என்றார்கள். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள். நாங்கள் சேர்த்துக்கொண்டோம். அந்தக் குழந்தையால் தன்னுடைய பெரும்பாலான பணிகளை அடுத்தவர்கள் துணையில்லாமல் செய்ய முடியாது. பெற்றோர் இருவருமே பள்ளி முடியும் வரை உடன் இருப்பார்கள். அந்தக் குழந்தை மிகச் சிறப்பாகப் படித்தான். அவனால் கிரியேட்டிவாக சிந்திக்க முடியாதே தவிர, மற்ற அனைத்தையும் சிறப்பாகச் செய்தான். இதைப் பார்த்துவிட்டு இன்னும் மூன்று குழந்தைகள் எங்கள் பள்ளியில் சேர்ந்தார்கள்.

'அரசுப் பள்ளி என்பது அனைவருக்குமானது; எல்லாக் குழந்தைகளும் கற்கப் பிறந்தவர்களே' என்கிற உண்மைகளை உணர்த்தவே இந்தக் குழந்தைகளை சேர்த்துக்கொண்டு படிக்க வைக்கிறோம். இன்னொரு சிறப்பான விஷயத்தைச் சொல்ல வேண்டும். நடுத்தர, வசதி படைத்த குழந்தைகளைக் காட்டிலும் மிகக் குறைவான வசதிகளுடன் வாழ்கிற எங்கள் பள்ளிக் குழந்தைகள் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளை அவ்வளவு அக்கறையுடன் கவனித்துக்கொள்வார்கள். ஒரு குழந்தைக்கு எச்சில் ஒழுகிக்கொண்டே இருக்கும். அசிங்கம் என்றெல்லாம் பார்க்காமல் அருகில் இருக்கும் குழந்தைகள் கைக்குட்டையை எடுத்துக்கொடுத்து 'தொடச்சிக்கோடா' என்பார்கள். இவர்களைப் பார்த்து பல விஷயங்களை நாங்கள் கற்றுக்கொள்கிறோம்'' என தங்கள் பள்ளிக்குழந்தைகளின் பண்புகளை பெருமிதத்தோடு விவரிக்கிறார் வேணி.

பெரும்பாலும் நன்கொடைகள் மூலம், மாணவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்கிறார் வேணி. கைவினைக் கலைகள், இசை, நடனம், விளையாட்டு போன்ற மாணவர்களின் அறிவு மற்றும் உடல் வளர்ச்சிக்கு உதவும் பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் தருகிறது இந்தப் பள்ளி.

''ஒவ்வொரு பாடத்தையும் நான் நாடகமாக மாற்றிவிடுவேன். நீதிக்கதைகள், அறிவியல் கதைகள் என மாணவர்களின் கற்கும் விதத்தை எளிமையாக்கி சொல்லித்தருகிறோம். நிச்சயம் இந்த அணுகுமுறை சிறப்பான அடித்தளத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்'' என்கிறார் வேணி.

'மாற்றத்தை வகுப்பறையிலிருந்து தொடங்க வேண்டும்' என்கிற முதுமொழியை நினைவுபடுத்துகிறார் தலைமை ஆசிரியர் வேணி.

– மு.வி.நந்தினி

# விளையாடி விளையாடி படிப்போம்!

## விஜயபாஸ்கர் விஜய்

வகுப்பில் மொத்தம் 32 பேர். அவங்களை எல்லாம் கவிதா மிஸ் 'இன்டோர் ஸ்போர்ட்ஸ்' ரூமுக்கு அழைச்சிக்கிட்டுப் போறாங்க. அறிவியல் பாடம் எடுக்கிற கவிதா மிஸ்ஸுக்கு விளையாட்டு ரூம்ல என்ன வேலை? தெரியலை... கூடவே போய்ப் பார்ப்போம்!

கவிதா மிஸ் அங்கே போனதும் பசங்களை நாலு நாலு பேரா பிரிச்சாங்க. எட்டு கேரம் போர்டுகளுக்கு பக்கத்துல உட்கார வைச்சாங்க. ''பசங்களா! எல்லாரும் ஜாலியா விளையாடுங்க. நான் இப்போ வர்றேன்''னு சொல்லிட்டுப் போனாங்க.

பசங்களுக்கு ஒரே கொண்டாட்டம். ஸ்ட்ரைக்கரை வச்சி கேரம் காயின்ஸை அடிச்சி அடிச்சி ஜாலியா விளையாடுறாங்க.

பத்து நிமிஷத்துல கவிதா மிஸ் ஒரு போர்டை தூக்கிட்டு வர்றாங்க. எல்லாரும் பாக்குற இடத்துல அந்த போர்டை வைக்கிறாங்க.

''ஓகே! விளையாட்டை நிறுத்திட்டு இங்க பாருங்க''ன்னு சொன்னாங்க. பசங்க பாக்குறாங்க.

''ஓகே, உங்க கையில ஒரு ஸ்ட்ரைக்கர் இருக்கு. அப்படித்தானே?''

''ஆமா மிஸ்!''

''அதோட வெயிட் என்ன?''

''தெரியல மிஸ்!''

''அதோட வெயிட் 15 கிராம் இருக்கலாம். சரியா? இப்போ அந்த ஸ்ட்ரைக்கர் போர்டுல வேகமா போகும்போது அதுக்கொரு சக்தி கிடைக்குதா? அது வேகமா போகும்போது அதோட வெயிட் அதிகமானது மாதிரி இருக்கா?''

''ஆமா மிஸ்!''

''ஏன் அப்படி இருக்கு?''

''ஏன்னா நாம அது மேல ஒரு வேகம் கொடுக்குறோம் மிஸ். வேகமா விரலால அதைத் தள்ளி விடுறோம்.''

''இப்போ ஒரு பொருள் இருக்கு. அதுக்கொரு நிறை (Mass) இருக்கு. அதுமேல ஒரு Velocity கொடுக்கும்போது, அது இன்னொரு சக்தியா வருது. அதுக்குப் பேருதான் Momentum. சரியா?''

''சரி!''

''அப்போ Momentum என்றால் என்ன? Velocity x Mass.

Momentum = Mass x Velocity

Momentum = MV ஓகேவா?''

''ஓகே மிஸ்!''

''இப்ப ஸ்ட்ரைக்கருக்கு ஒரு மொமன்டம் இருக்கு. அதைக் கொடுத்தா அது காயின்ஸ் மேல மோதுது. அப்ப என்னாகுது? ஸ்ட்ரைக்கரைவிட காயின் வேகமா போகுதா? ஸ்லோவா போகுதா?''

''வேகமா போகுது மிஸ்!''

''அது ஏன் தெரியுமா? law of conservation of momentum என்கிற விதியால்தான்?''


''அப்படின்னா என்ன மிஸ்?''

''இப்போ ஒரு பொருள் மேல ஒரு மொமன்டம் ஏற்படுது. அது இன்னொரு பொருள் மேல மோதுது. அப்படி மோதும்போது ஒட்டுமொத்த மொமன்டமும் சமமாகத்தான் இருக்கும்.''

''புரியலை மிஸ்!''

''சரி, ஸ்ட்ரைக்கரோட மொமன்டம் என்ன?''

''ஸ்ட்ரைக்கரோட எடை (நிறை)




x ஸ்ட்ரைக்கரோட திசைவேகம்.''

''இதை 15 x 40 என்று போட்டுக்கலாமா? அதாவது ஸ்ட்ரைக்கரோட Mass 15 கிராம். Velocity = 40 cm/s. அதாவது ஒரு விநாடிக்கு 40 செண்டிமீட்டர் தூரம் போகும்னு அர்த்தம். அப்போ அதோட மொமன்டம் என்ன? 15 x 40 = 600 gram centimetre/second. அதாவது 600 கிராம் எடை ஒரு செண்டிமீட்டர் தூரத்தை ஒரு விநாடியில கடந்தா எப்படி இருக்குமோ, அப்படி அந்த

ஸ்ட்ரைக்கர் நகருது. இதை m1v1 அப்படின்னு வெச்சிக்குவோம்.''

''சரி மிஸ்!''


"law of conservation of momentum என்ன சொல்லுதுன்னா, இந்த ஸ்ட்ரைக்கரோட மொமன்டம் ஒரு காயின் மேல செலுத்தப்படும்போது மாறாது. அது அப்படியேதான் இருக்கும். புரியுதா?''

''புரியல மிஸ்!''




''அதாவது, ஸ்ட்ரைக்கர் வந்து மோதும்போது 600 gram centimetre / second மொமன்டம் கேரம் காயின் மேல செலுத்தப்படுது. மோதினதும் காயினோட மொமன்டமும் அதே 600 gram centimetre / second ஆகிடும். மொமன்டம் ஸ்ட்ரைக்கரிலிருந்து காயினுக்குக் கடத்தப்படுது.''

''அதாவது m1v1 = m2v2. அப்படித்தானே மிஸ்?''



''ஆமா. இங்க m1v1 என்ன?''

''அது 600 மிஸ்.''

''அப்போ 600 = m2v2. இதுல m2 என்னது?''

''அது காயினோட எடை (நிறை). அது 5 கிராம் மிஸ்.''

''ஸ்ட்ரைக்கர் எடை 15 கிராம்னு சொன்னேன் இல்லையா? காயினோட எடை 5 கிராம். இப்போ 600 = 5x v2. அதனால v2 = 600/5 = 120 cm/second. அப்போ காயினோட வேகம் கூடுதா இல்லையா?''

''கூடுது மிஸ். ஸ்ட்ரைக்கரோட எடை அதிகம்; ஆனா வேகம் குறைவு. காயினோட எடை குறைவு. அதை ஸ்ட்ரைக்கர் இடிக்கிறதனால கிடைக்கிற மொமன்டத்தை சமம் ஆக்குறதுக்காக அதோட வேகத்தைக் கூட்டிடுது. அப்படித்தானே மிஸ்?''

''அதேதான்!''

''அப்போ ஸ்ட்ரைக்கர் காயினை அடிச்ச உடனே காயினோட வேகம் கூடுது. conservation of momentum விதியை மெயின்டெயின் பண்ணத்தானே இது நடக்குது மிஸ்?''

''ஆமா. இப்போ நீங்க கேரம் போர்டு விளையாடுங்க. ஆனா விளையாடும்போது conservation of momentum இயற்பியல் விதியை நினைச்சிக்கிட்டே விளையாடுங்க.''

உடனே எல்லா பசங்களும் ஜாலியா கேரம் விளையாடி விளையாடி பிஸிக்ஸ் படிச்சாங்க. அப்போ கணேசன் முகம் மட்டும் குழப்பமா இருந்துச்சு. ''மிஸ்! 'எடை'ங்கிறீங்க, 'நிறை'ங்கிறீங்க. எனக்கு ஒரே குழப்பம் மிஸ்'' என்றான்.

''எடைன்னா weight, நிறைன்னா mass. இதுல Mass என்பது அப்படியேதான் இருக்கும். இதோ, இந்த பேனாவோட Mass என்பது இது ஆக்கிரமிச்சிருக்கிற இடம். இந்த இடத்தை அடைச்சிட்டு இருக்கிற பொருள். சரியா? இந்த பேனாவோட Mass பூமியிலும் ஒண்ணுதான், நிலாவுலயும் ஒண்ணுதான், யுரேனஸ்லயும் ஒண்ணுதான். ஆனா, 'எடை' என்பது Mass ஈர்க்கிற புவி ஈர்ப்பு விசையினால வர்றது. இந்த பேனாவ பூமியில் ஒரு தராசுல போட்டா பூமியோட புவி ஈர்ப்பு விசைக்கு ஒரு வெயிட் காட்டும். நிலாவுல பூமியின் எடையில ஆறுல ஒரு பங்குதான் இருக்கும். யுரேனஸ்ல வேற மாதிரி இருக்கும். இதுதான் நிறைக்கும் எடைக்கும் உள்ள வித்தியாசம். நாம தினசரி வாழ்க்கையில Mass என்பதைத்தான் weight என்று சொல்வோம்.''

''புரியுது மிஸ்!''

''இப்ப கணேசன் 40 கிலோ வெயிட் என்றால், கணேசனோட Mass 40 kg, அந்த 40 கிலோவை பூமி பிடிச்சி இழுக்கும்போது என்ன விசை இருக்குமோ அந்த வெயிட் அதுதான்னு அர்த்தம்.''

இப்படி பிஸிக்ஸ் கிளாஸா, அல்லது பிஸிக்கல் எஜுகேஷன் கிளாஸான்னு கண்டுபிடிக்க முடியாதபடி கவிதா மிஸ் பாடம் சொல்லிக் கொடுக்குறாங்க. ●

# ஆச்சர்ய

■ புலி ஒரு வேட்டையை முடித்ததும் ஒரே நேரத்தில் 36 கிலோ எடையுள்ள இறைச்சியைச் சாப்பிடும்.





■ நீர் யானைகள் மனிதர்கள் அளவுக்கு வேகமாக ஓடும் வல்லமை பெற்றவை.

■ அமெரிக்காவின் ஹவாய் தீவில் இருக்கும் ஓர் அருவியில் சில சமயங்களில் தண்ணீர் மேலிருந்து கீழே கொட்டுவதற்கு பதிலாக கீழிருந்து மேலே போகிறது.



■ நம் விஞ்ஞானிகள் நிலவின் மேற்பரப்பைப் பற்றி அறிந்திருப்பதை விடவும் கடலின் ஆழத்தைப் பற்றி குறைவாகவே அறிந்திருக்கிறார்கள்.




■ மனிதர்கள் தங்கள் வாழ்நாளில் ஐந்து ஆண்டுகளை சாப்பிடுவதற்கே செலவழிக் கிறார்கள்.






■ ரைட் சகோதரர்கள் முதன்முதலாக உருவாக்கிய விமானத்தின் நீளத்தைவிடவும், போயிங் 747 விமானத்தின் இறக்கை பெரியது.

■ ஒவ்வொரு மாதமும் கூடைப்பந்து சைஸில் ஒரு விண்கல் வந்து பூமியில் விழுகிறது. பெரும்பாலும் மனித நடமாட்டம் இல்லாத இடங்களில் விழுவதால் நமக்குத் தெரிவதில்லை.



■ இந்த உலகில் இருக்கும் உயிரினங்களில் 75 சதவிகிதம் பூச்சிகள்தான்.





■ வரிக்குதிரையின் சருமம் கறுப்பாகவே இருக்கும். அதன் மேலே வளர்ந்திருக்கும் ரோமம்தான் கோடுகள் இருப்பது போன்ற தோற்றத்தை அதற்குத் தருகிறது.

■ எவரெஸ்ட் சிகரம் ஒவ்வொரு ஆண்டும் மூன்று மி.மீ உயரம் வளர்ந்து கொண்டிருக்கிறது.



■ ஒரு நட்சத்திரம் எவ்வளவு பிரகாசமாக இருக்கிறதோ, அவ்வளவு சீக்கிரம் அதன் ஆயுள் முடிந்து போகிறது.






■ உருளைக் கிழங்கை நீளமாக வெட்டிப் பொரித்து சமைக்கப்படும் ஃபிரெஞ்சு ஃப்ரை பிரான்ஸில் கண்டுபிடிக்கப்படவில்லை. பெல்ஜியம் நாட்டின் உருவாக்கம் அது!

■ இத்தாலியில் ஓர் எரிமலை 2,000 ஆண்டுகளாக சீறி நெருப்புக்குழம்பை வெளியிட்டபடி உள்ளது.





■ டைனோசர்கள் தோன்றுவதற்கு முன்பே இந்த பூமியில் ஆமைகள் வாழ்ந்து கொண்டிருந்தன.

■ நாய்களால் 100 விதமான வித்தியாச முகபாவனைகளைக் காட்ட முடியும்.



# உலகம்



■ முதலைகளால் எதையும் மென்று சாப்பிட முடியாது.

■ நீங்கள் பார்க்கும் ஒரு மின்னல், மணிக்கு 36.5 கோடி கிலோமீட்டர் வேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது.





■ நாம் ஒருநாளில் சுமார் 25 ஆயிரம் தடவை மூச்சை இழுத்துவிடுகிறோம்.



■ டால்மேஷன் இன நாய்கள் பிறக்கும்போது வெள்ளையாகவே இருக்கும். வளர்ந்தபிறகே அவற்றின் உடலில் புள்ளிகள் தோன்றுகின்றன.

■ கோலா கரடிகள் ஒரு நாளில் நான்கு மணி நேரம் மட்டுமே விழித்திருக்கின்றன.





■ நமது ஜீரண மண்டலத்தில் சுருண்டு இருக்கும் குடலை நீளமாக வைத்தால் 30 அடி தூரத்துக்கு இருக்கும்.

■ எல்லா விலங்குகள் சாப்பிடும் உணவுகளையும்விட, பன்றிகள் சாப்பிடும் உணவே கிட்டத்தட்ட மனிதர்களின் உணவுப் பழக்கத்தோடு ஒத்துப் போகிறது.



■ ஈல் மீன்கள் பின்பக்கமாகவும் நீந்தும் வல்லமை பெற்றவை.





■ வாசனைகளை நமது நாசியின் இடது துவாரத்தை விட வலது துவாரம் நன்கு உணரும்.




# கல்விக்கடன் வாங்குவது எப்படி?

**உயர்கல்விக்கான கட்டணங்களும், இதர கல்லூரி செலவினங்களும் தாறுமாறாக உயர்ந்திருக்கும் காலம் இது. இந்நிலையில், பணம் இல்லை என்பதற்காக இளைஞர்களுக்குக் கல்வி வாய்ப்பு மறுக்கப்படக்கூடாது என்பதற்காக மத்திய அரசு கொண்டு வந்த திட்டமே கல்விக்கடன் திட்டம். இந்தக் கடனைப் பெற்று படிக்க விரும்பும் மாணவர்களுக்கு உதவுவதற்காக இந்த விளக்கக் கட்டுரை...**

## எந்த வங்கியில் கல்விக்கடன் கிடைக்கும்?

தாங்கள் குடியிருக்கும் பகுதிக்கு அருகில் உள்ள வங்கிகளை அணுகினால் எளிதில் கல்விக்கடன் கிடைக்கலாம். அதேபோல் தாங்கள் வரவு–செலவுக் கணக்கு வைத்திருக்கும் வங்கிகளில் விண்ணப்பித்தால், சீக்கிரம் கல்விக்கடன் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. தேசியமயமாக்கப்பட்ட 27 வங்கிகளிலும் கடன் பெறலாம். ஒவ்வொரு பகுதியிலும் 'முன்னோடி வங்கி' என ஒரு வங்கியை மாநில அரசு நிர்ணயித்துள்ளது. இதுபற்றி தாலுக்கா அலுவலகத்தில் கேட்டு தகவல் பெறலாம்.

+2 முடித்த மாணவர்கள் தங்களுக்கு எந்தெந்த வகையில் உதவித்தொகை பெற வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை முதலில் பரிசீலித்து, இறுதியாகவே கல்விக்கடன் பெற முயற்சிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட வங்கியில், மாணவரும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவரும் இணைந்து வங்கிக் கணக்கு துவங்க வேண்டும்.



முன்பெல்லாம், 'வேறு எங்கும் கல்விக்கடன் வாங்கவில்லை', 'பெற்றோரும் வேறு எந்தக் கடனையும் முறையாகத் திருப்பிச் செலுத்தாமல் இல்லை' என தடையின்மைச் சான்று வேண்டும் என அலைக்கழித்தார்கள். இது பெரிய பிரச்னை ஆனதால், 'கல்விக்கடன் கேட்கும் மாணவர்கள், தடையின்மைச் சான்று தரத் தேவையில்லை. எந்த வங்கியிலும் கடனும், நிலுவையும் இல்லை என பெற்றோர் உறுதிமொழிச்சான்று கொடுத்தால் போதும். அதை ஆதாரமாக வைத்து, கல்விக்கடன் வழங்க வேண்டும்' என அனைத்து வங்கிகளுக்கும் ரிசர்வ் வங்கி உத்தரவு பிறப்பித்துள்ளது.

விண்ணப்பத்தை வங்கியின் இணையதளத்திலேயே எடுத்துக் கொள்ளலாம். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, தேவையான இணைப்புகளைச் சேர்த்து பதிவுத் தபாலில் வங்கிக்கு அனுப்ப வேண்டும்.

## தகுதிகள் என்ன?

- இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- இந்தியாவிலோ, வெளிநாடுகளிலோ இருக்கும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றிருக்க வேண்டும்.
- நுழைவுத் தேர்வு அல்லது அதிக மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை பெற்றிருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், அந்தப் படிப்புக்கு இருக்கும் வேலைவாய்ப்புகள் மற்றும் கல்வி நிறுவனத்தின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து கடன் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும்.
- நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்க்கை பெறுவோரும் கல்விக்கடன் பெறலாம். ஆனால் இதற்கு இந்திய வங்கிகள்

கூட்டமைப்பு குறைந்தபட்ச மதிப்பெண்களை வரையறை செய்திருக்கிறது. அதாவது, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி இன மாணவர்கள் 50 சதவீதத்துக்கு மேலும், இதர பொதுப் பிரிவினர் 60 சதவீதத்துக்கு மேலும் மதிப்பெண்கள் பெற்றிருந்தால் மட்டுமே, நிர்வாக ஒதுக்கீட்டில் படிக்க கல்விக்கடன் கிடைக்கும்.

● ஒரு குடும்பத்தில் ஒருவருக்குத்தான் கல்விக்கடன் என்றெல்லாம் எந்த வரையறையும் இல்லை. சகோதரனோ, சகோதரியோ கல்விக்கடன் பெற்றிருந்தாலும், விண்ணப்பிக்கும் மாணவருக்குக் கடன் வழங்கப்படும்.

● கல்விக்கடனுக்கு விண்ணப்பிக்க வயது வரம்பு எதுவும் கிடையாது. விண்ணப்பதாரர் மைனராக இருந்தால், பெற்றோரிடம் உறுதிச்சான்று பெறப்படும்.

## யாருக்குக் கடன் கிடைக்கும்?

மத்திய, மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கற்றுத் தரப்படும் அனைத்து படிப்புகளுக்கும் கல்விக் கடன் கிடைக்கும். குறிப்பாக எதிர்காலத்தில் வேலைவாய்ப்புள்ள படிப்புகளுக்கு எளிதாகக் கிடைக்கும். யு.ஜி.சி, ஏ.ஐ.சி.டி.இ போன்ற உயர்கல்வி அமைப்புகள் அங்கீகரித்த இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டங்கள் (மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் போன்றவை...), ஐ.ஐ.டி., என்.ஐ.எஃப்.டி., ஐ.ஐ.எம்., ஐ.ஐ.எஸ் போன்ற சிறப்புக் கல்வி நிறுவனங்களில் இருக்கும் படிப்புகள் மற்றும் சி.ஏ., சி.எஃப்.ஏ., ஐ.சி.டபிள்யூ.ஏ., எம்.பி.ஏ போன்ற படிப்புகளுக்கும், டிப்ளமோ படிப்புகளுக்கும் கடன் கிடைக்கும்.

வெளிநாடுகளைச் சேர்ந்த முன்னணிப் பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் வழங்கும் வேலைவாய்ப்புள்ள படிப்புகளுக்கும் கல்விக்கடன் பெறலாம். வெளிநாடுகளில் சென்று படிக்கவும் கல்விக்கடன் கிடைக்கும்.

ஒரு பட்டம் முடித்துவிட்டு, அடுத்த பட்டம் பயிலவும் கடன் பெறலாம். உதாரணமாக டிப்ளமோ முடித்துவிட்டு, அடுத்ததாக பி.இ சேர்வதற்கும் கடன் பெறலாம். கல்விக்கடன் பெற்று பி.டெக் முடித்துவிட்டு திரும்பவும் எம்.பி.ஏ சேர்வதற்கும் கடன் பெறலாம்.

அங்கீகாரம் இல்லாத கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்கு கல்விக்கடன் கண்டிப்பாகக் கிடைக்காது.

## என்னென்ன சான்றிதழ்கள் தேவை?

● பிளஸ் 2 மதிப்பெண் சான்றிதழ்.

● ரேஷன் கார்டு.

● பெற்றோரின் வருமானச் சான்றிதழ்.

● கல்லூரியில் சேர்ந்ததற்கான அட்மிஷன் கடிதம்.

● படிப்புக்கு ஆகும் செலவு குறித்த எஸ்டிமேட்.

## யாருக்குக் கடன் கிடைக்காது?

● ஏற்கனவே சகோதரர் அல்லது சகோதரி கல்விக்கடன் பெற்று, வேலைக்குச் சென்றும் திருப்பிச் செலுத்தாமல் இருந்தால் இவருக்குக் கடன் மறுக்கப்படலாம்.

● கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்கும் மாணவரின் தந்தையோ, பெற்றோரில் ஒருவரோ அந்த வங்கியில் ஏற்கனவே கடன் பெற்று, அதை சரிவர திருப்பிச் செலுத்தாமல் இருந்தால் (தவணை கடந்த பாக்கி) கடன் மறுக்கப்பட வாய்ப்பு அதிகம்.

● வேறு வங்கிகளில் கடன் வாங்கி சரிவரத் திருப்பிச் செலுத்தாமல் இருந்தாலும், கல்விக்கடன் கிடைக்காது.

## எவ்வளவு கடன் கிடைக்கும்?

இந்தியாவில் உயர்கல்வி பெற அதிகபட்சமாக 10 லட்சம் ரூபாய் வரையிலும், வெளிநாடுகளில் பயில அதிகபட்சம் 20 லட்சம் ரூபாய் வரையிலும் கடன் பெறலாம்.

கடன் தொகை நாலு லட்ச ரூபாய் வரை இருந்தால் பிணையோ, உத்தரவாதமோ தேவையில்லை. நான்கு முதல் ஏழரை லட்சம் ரூபாய் வரை கடன் வாங்குவதாக இருந்தால், மூன்றாம் நபர் ஜாமீன் தரவேண்டும். ஏழரை லட்சத்துக்கும் மேல் என்றால், சொத்துப்பிணை வைக்கவேண்டியிருக்கும்.

ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் கல்விக்கடன் பெறும்போது, ஒட்டுமொத்தக் கடன் தொகையும் கூட்டப்பட்டு, அதற்கு ஏற்றபடி பிணை செலுத்த வேண்டியிருக்கும்.

ஒருவர் எவ்வளவு தொகை கடன் பெறுகிறாரோ,



அதற்கு ஈடான இன்சூரன்ஸ் பிரீமியம் எடுத்திருப்பது அவசியம். படிக்கும் காலத்தில் அதற்கு முறையாக தவணைகள் கட்டுவதும் அவசியம். எதிர்பாராத அசம்பாவிதம் ஏதேனும் நிகழ்ந்தால், அந்த இன்சூரன்ஸ் கைகொடுக்கும்.

## எந்தெந்த செலவுகள் அடங்கும்?

- கல்லூரியில் கட்ட வேண்டிய கல்விக் கட்டணம்.
- தேர்வுக் கட்டணம், புத்தகம், நூலகம் மற்றும் ஆய்வுக்கூடக் கட்டணம்.
- விடுதி மற்றும் சாப்பாட்டுச் செலவுகள்.
- மாணவர்களின் கல்விச் சாதனங்கள் மற்றும் சீருடைகள்.
- படிப்பிற்கான கம்யூட்டர் வசதி மற்றும் புராஜெக்ட் செலவினங்கள்.
- வெளிநாடுகளில் படிப்பவர்கள் என்றால் பயணக் கட்டணம்.
- கல்லூரிகள் பெறும், திருப்பிச் செலுத்தத்தக்க டெபாசிட்டுகள்.

## கடனுக்கும் படிப்புக்கும் தொடர்பு உண்டா?

கல்விக்கடன் வாங்கிப் படிக்கும் மாணவர்கள் கல்வியில் முழு கவனம் செலுத்துவது அவசியம். செமஸ்டர் தேர்வு மதிப்பெண் சான்றிதழ்களை ஒவ்வொரு ஆறு மாதத்திற்கு இடையே வங்கி மேலாளரிடம் காட்ட வேண்டியிருக்கும். தங்களிடம் கடன் பெற்ற மாணவர்கள், அதை வைத்து ஒழுங்காகப் படிக்கிறார்கள் என்று சரி பார்க்கவே வங்கி மேலாளர்கள் மதிப்பெண்களை விசாரித்துத் தெரிந்து கொள்கிறார்கள். கடன் பெற்ற மாணவர்கள், ஒழுங்காகப் படித்து நல்ல வேலைக்குச் சென்று, கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று வங்கிகள் எதிர்பார்ப்பது நியாயம்தானே! ஏதேனும் ஒரு பாடத்தில் தேர்ச்சி பெறாமல் போனால், மேற்கொண்டு தர வேண்டிய கடன் தொகை நிறுத்தப்படலாம். மீண்டும் அந்தப் பாடத்தில் தேர்ச்சி பெற்ற பிறகே, கல்விக்கடனை எதிர்பார்க்க முடியும்.

படிப்பை பாதியில் நிறுத்தினாலோ, ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக கல்லூரியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டாலோ, கல்விக் கடன் நிறுத்தப்படும். அப்படிப்பட்ட சூழலில், அதுவரை வாங்கிய கடனை வட்டியோடு உடனே திரும்பச் செலுத்த வேண்டியிருக்கும்.

## கடனுக்கு வட்டி எவ்வளவு?

இது ஒவ்வொரு வங்கிக்கும் மாறுபடுகிறது. பொதுவாக 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதம் வரை வசூலிக்கப்படுகிறது.



தொழில்நுட்பம் மற்றும் புரொஃபஷனல் கல்வி பயில்பவர்களுக்கு இந்த வட்டியில் மானியம் உண்டு. பெற்றோரின் ஆண்டு வருமானத்தைப் பொறுத்து இதைப் பெறலாம். வருமானச் சான்றிதழ் இதற்காகத்தான் கேட்கப்படுகிறது. இச்சான்றிதழை வைத்தே வட்டிக்கு மானியத்தை மத்திய அரசிடம் வங்கிகள் கேட்டுப்பெற முடியும்.

படிக்கும் காலத்தில் கல்விக்கடனுக்கான வட்டியை பெற்றோர்கள் கட்ட வேண்டிய அவசியம் கிடையாது. அப்போதைய காலத்துக்கான வட்டியை மத்திய அரசே வங்கிகளுக்குச் செலுத்தி விடும். படிப்பு முடிந்து வேலைக்குச் சென்ற பிறகு வட்டியுடன் அசலையும் சேர்த்துக் கட்ட ஆரம்பிக்க வேண்டும். இந்தச் சலுகை வெளிநாடுகளில் படிக்கும் மாணவர்களுக்குக் கிடையாது.

## எப்படி திரும்பக் கட்டுவது?

படித்து முடித்து ஓராண்டு ஆனதும் அல்லது வேலை கிடைத்து ஆறு மாதம் ஆனதும், வாங்கிய கடனை வட்டியுடன் திருப்பிச் செலுத்த ஆரம்பிக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசத்துக்குள் படித்து முடிக்கவில்லை என்றால், வங்கியில் தகவல் தெரிவித்து அதிகபட்சமாக இன்னும் 2 ஆண்டுகள் படிப்பு காலமாக அனுமதிக்கக் கோரலாம். வேலை கிடைக்கவில்லை என்றாலும், அந்த உண்மையைச் சொல்லி கால நீட்டிப்பு பெறலாம். ஆனால், இந்த சலுகைகளைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது.

## கடன் தர மறுத்தால்?

கல்விக்கடன் விண்ணப்பத்தில் தவறான தகவல்கள் இருப்பதாகக் கருதினால் மட்டுமே ஒருவரின் விண்ணப்பத்தை வங்கி நிராகரிக்க முடியும். வேறு ஏதாவது காரணங்கள் சொன்னால், அதை எழுத்துமூலமாகத் தரும்படி வங்கி மேலாளரிடம் கேட்கலாம். அந்தக் காரணங்கள் நியாயமாக இல்லாதபட்சத்தில், அந்த வங்கியின் மண்டல மேலாளரிடம் புகார் செய்யலாம். அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அந்த வங்கியின் தலைவரிடம் புகார் செய்யலாம். மின்னஞ்சல், கடிதம், தொலைபேசி என எந்த வழியிலும் நீங்கள் புகார் செய்யலாம்.

ரிசர்வ் வங்கியிலும் கல்விக்கடன் தொடர்பான புகார்களை விசாரிக்க சிறப்புப் பிரிவுகள் இயங்குகின்றன.

The Banking Ombudsman, C/O Reserve Bank of India, Rajaji Salai, Chennai-600001

அல்லது

Central Manager (RPCD), Reserve Bank of India, Rajaji Salai, Chennai-600001

என்ற முகவரிக்கு புகார்க் கடிதம் அனுப்பலாம். ●

# கல்வி மொழிகள்

கல்வி என்பது ஏதோ ஒன்றைப் பற்றிய பரவசத்தைத் தருவது. வேட்கையும் ஊக்கமும் பெற்று புதிதாக எதையாவது அறிவது.

– ஸ்டீவ் இர்வின்

மனிதர்களுக்கு அறிவு வளர்ச்சி பிறந்ததுமே ஆரம்பித்துவிடுகிறது. வாழ்வின் கடைசி நிமிடம் வரை அது வளர்கிறது.

– ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

புத்திசாலித்தனமாக தங்கள் வாய்ப்புகளைத் தேர்ந்தெடுக்க மனிதர்களுக்கு ஜனநாயகம் தேவை. அந்த புத்திசாலித்தனம் கிடைக்க கல்வி தேவை. எனவே, அந்த ஜனநாயகத்தைப் பாதுகாப்பது கல்விதான்.

– ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட்

கல்விக்கு மதிப்பு கொடுக்கும் வீடுகளிலிருந்தே மிகச்சிறந்த மாணவர்கள் வருகிறார்கள். பெற்றோர்கள் புத்தகங்கள் படிப்பதைப் பார்க்கும் குழந்தைகளே கற்றுக்கொள்ள ஆர்வமாக இருக்கிறார்கள்.

– லியோ பஸ்காக்லியா

புதிய சிந்தனைகளால் விரிவடையும் ஒரு மனிதனின் மனம், அதன்பிறகு சுருங்குவதே இல்லை.

– ஆலிவர் வெண்டெல் ஹோம்ஸ்

தன் ஆசானைவிட அதிகம் கற்றுக்கொள்ளாதவனே மோசமான மாணவன்.

– லியனார்டோ டா வின்சி

ஒருவர் பெறும் கல்வியானது, அடுத்தவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். உங்கள் சமூகத்தையும், இந்த உலகத்தையும், நீங்கள் பிறக்கும்போது இருந்ததைவிட மகத்தானதாக மாற்றுவதே கல்வியின் பணி.

– மரியன் ரைட் எடெல்மேன்

தான் வண்ணத்துப்பூச்சி ஆகப்போகிறேன் என்று சொல்லும் கம்பளிப்புழுவிடம் கற்றுக்கொள்ள உங்களுக்கு எதுவும் இல்லை. எதிர்பாராத ஆச்சரியங்களைக் கற்றுக்கொள்ளுங்கள்.

– பக்மின்ஸ்டர் ஃபுல்லர்

‘எனக்கு ஏற்கனவே தெரியும்’ என நினைத்துக் கொண்டிருக்கும் விஷயத்தை ஒரு மனிதன் ஒருபோதும் கற்றுக்கொள்ள முடியாது.

– எபிக்டெடஸ்

கல்விதான் ஒரு சமூகத்தின் ஆன்மா. அது ஒரு தலைமுறையிடமிருந்து இன்னொரு தலைமுறைக்கு சென்றபடி இருக்கிறது.

– செஸ்டர்டன்

கல்வி என்பது எல்லாவற்றிலிருந்தும் கிடைக்கும். கல்வி நிலையத்தோடு அதை முடக்கிவிடக்கூடாது.

– மார்க் ட்வைன்

தினம் ஒரு பாடத்தை இயந்திரம் போல நடத்துவது அல்ல ஆசிரியரின் பணி. ஆர்வத்தைத் தூண்டிவிட வேண்டும். அதன்பின் அவர்கள் வாழ்க்கை முழுக்க கற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார்கள்.

– க்ளே பெட்ஃபோர்ட்

ஒருவர் கற்றுக் கொடுக்கும் போது, இருவர் கற்றுக் கொள்கிறார்கள்.

– ஜோஸப் ஜோபர்ட்

உண்மையான கல்வி என்பது, மாணவர்களிடம் இருக்கும் மிகச்சிறந்த பண்புகளை வெளிக்கொண்டு வர வேண்டும். மானுடத்தைவிட மிகச்சிறந்த புத்தகம் இந்த உலகில் இல்லை.

– சீஸர் சாவேஸ்

## அகரம் பிரியாவிடைக் கொண்டாட்டம்!



அகரம் விதை திட்டத்தில் 2014ம் ஆண்டு எஞ்சினியரிங் பாடப்பிரிவில் சேர்ந்து படித்து முடித்திருக்கும் மாணவ, மாணவிகளுக்கு பிரியாவிடைக் கொண்டாட்டம் நடத்தப்பட்டது. இந்த மாணவர்கள் வெவ்வேறு கல்லூரிகளில் படித்தாலும், அகரம் நிகழ்வுகள் மற்றும் பயிற்சி முகாம்களில் இணைந்து பங்கேற்று நண்பர்களாகப் பழகியிருந்தனர். கல்லூரி காலத்தை முடித்து வாழ்க்கைப் பாடத்தைப் படிக்கச் செல்லும் இவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு, சென்னை ராமாபுரத்தில் உள்ள எம்.ஜி.ஆர் இல்லத்தில் ஜூன் 9 மற்றும் 10-ம் தேதி நடத்தப்பட்டது.

இதை அவர்களின் தம்பி, தங்கைகள்... அதாவது 2015ம் ஆண்டு எஞ்சினியரிங் சேர்ந்த மாணவ, மாணவிகள் இணைந்து நடத்தினர். பல்வேறு வகையான நிகழ்ச்சிகளையும், விளையாட்டுகளையும் நடத்தி தங்கள் அண்ணா, அக்காக்களை அவர்கள் உற்சாகப்படுத்தினர். இரண்டு நாட்களும் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் அவர்களுக்குப் பயிற்சிகளும் தரப்பட்டன. சமூகத்தில் எப்படி வெற்றி பெறுவது, தோல்விகளை எப்படி சமாளிப்பது என்பதையெல்லாம் இந்த நிகழ்ச்சிகள் மூலம் அவர்கள் கற்றுக்கொண்டனர்.

இந்த இரண்டு நாள் கொண்டாட்டத்தில், தாங்கள் படிப்பை நிறைவு செய்த விதத்தைச் சொல்லி, தங்கள் தம்பி, தங்கைகளுக்கு வழிகாட்டினர். கல்வியை முடித்தவர்களுக்கு, 'அடுத்து என்ன செய்ய வேண்டும்' என்ற வழிமுறைகளையும் செயல்பாடுகளையும் சிறப்பு அழைப்பாளர்கள் எடுத்துரைத்தனர். அதன்பின் அவர்களின் வாழ்க்கை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். அது மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருந்தது.





## வேலைவாய்ப்பு பயிற்சி முகாம்

அகரம் விதை திட்டத்தின்கீழ் உயர்கல்வி படிக்கச் சேரும் மாணவர்களுக்கு கல்லூரிக் கல்வியைத் தாண்டி வேலைவாய்ப்புக்குத் தகுதி பெறும் வகையில் மொழிப்பயிற்சி மற்றும் திறன் பயிற்சிகள் தரப்படுகின்றன.

அகரம் மாணவர்களுக்கு இந்த ஆண்டு வேலைவாய்ப்புக்கான பயிற்சி வகுப்புகள் ஏப்ரல் 29ம் தேதி முதல் ஜூன் 11ம் தேதி வரை நடைபெற்றன. இதில் மூன்றாம் ஆண்டு பயிலும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவிகள் 137 பேருக்கு முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. நான்காம் ஆண்டு பயிலும் பொறியியல் துறையைச் சேர்ந்த 115 மாணவ, மாணவிகளுக்கு இரண்டாம் கட்டப் பயிற்சிவகுப்புகள் நடைபெற்றன. இந்தப் பயிற்சி வகுப்பில் அவர்களுக்கு மொழித்திறன் (Communication skill), நுண்ணறிவுத்திறன் (Quantitative Aptitude), குழுக் கலந்துரையாடல் (Group Discussion), மாதிரி நேர்காணலை எதிர்கொள்ளும் திறன் (Mock Interview, Presentation Skills), அடிப்படை ஆங்கில இலக்கணம் (Basic Grammar), தனித்திறன் மேம்பாட்டு வகுப்புகள் (Lifeskills) அனைத்தும் அளிக்கப்பட்டன.

மஹிந்திரா பயிற்சி மையத்தின் (Mahindra Pride Schooland Mahindra Pride Class) பயிற்சியாளர்கள் திருமதி ஆனந்தி, திரு. தினேஷ், செல்வி அஸ்வினி, செல்வி சாரோன் மற்றும் செல்வி திவ்யா ஆகியோர் இந்தப் பயிற்சிகளை அளித்தனர். தொழில்முனைவோராக மேம்பாடு அடைவது எப்படி என்பது பற்றி திரு. கிஷோர்குமார்(EDI) அவர்களும், புதுமைச் சிந்தனை மற்றும் படைப்பாற்றல் பற்றி திரு. விபிந்திரன் அவர்களும் பயிற்சி தந்தனர். தன்னார்வலர் திரு. பாபு அவர்கள் கணினியில் EXCEL பயன்படுத்தும்

# நிகழ்வுகள்

## அகரம் பிரியாவிடைக் கொண்டாட்டம்! 2

அகரம் விதை திட்டத்தில் 2015ம் ஆண்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து படித்து முடித்திருக்கும் மாணவ, மாணவிகளுக்கு பிரியாவிடைக் கொண்டாட்டம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு, சென்னை ராமாபுரத்தில் உள்ள எம்.ஜி.ஆர் இல்லத்தில் ஜூன் 9 மற்றும் 10-ம் தேதி நடத்தப்பட்டது. இதை அவர்களின் தம்பி, தங்கைகள்... அதாவது 2016ம் ஆண்டு கலை மற்றும் அறிவியல் பிரிவுகளில் சேர்ந்த மாணவ, மாணவிகள் இணைந்து நடத்தினர்.

கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுகள், ஒவ்வொருவரும் தங்கள் தனித்திறனை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் என மகிழ்ச்சிக்குக் குறைவில்லாமல் இந்த பிரியாவிடைக் கொண்டாட்டம் நடைபெற்றது. அதேசமயம், கல்வியை முடித்துச் செல்லும் மாணவ, மாணவிகளுக்குத் தேவையான பயிற்சிகளையும் சிறப்பு அழைப்பாளர்கள் வழங்கினர். உயர்கல்வி வாய்ப்பு பெறும் வழிகள், பணியில் சேர்ந்தபிறகு வாழ்க்கையை எதிர்கொள்வதற்கான பயிற்சிகள், சமூகத்தில் எப்படி வெற்றி பெறுவது, தோல்விகளை எப்படி சமாளிப்பது என எல்லாவற்றைப் பற்றியும் தெளிவாக விளக்கினர்.





தங்கள் படிப்பை நிறைவு செய்த மாணவர்கள், அவர்களின் வாழ்க்கை அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டனர். அது அடுத்தடுத்த ஆண்டுகளில் கல்லூரியில் சேர்ந்திருக்கும் மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருந்தது.



பயிற்சி தந்தார். அறப்போர் இயக்கத்தின் திரு. கந்தசாமி மற்றும் திரு. பசித் ஆகியோர், தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய ஆலோசனைகளை வழங்கினர். கல்வி ஆலோசகர் திருமதி. உலகம்மாள் மூலம் அரசு போட்டித் தேர்வுகள், அரசு வேலைவாய்ப்புகள் மற்றும் உயர்கல்வி பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்த வேலைவாய்ப்புப் பயிற்சி வகுப்புகள் அனைத்தும் சென்னை வளசரவாக்கத்தில் இருக்கும் அகரம் பயிற்சி மையம், சென்னை அடையாறில் இருக்கும் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை ராமாபுரத்தில் இருக்கும் டாக்டர் எம்.ஜி.ஆர். பேச்சு மற்றும் காதுகேளாதோர் இல்லம் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்றன. அகரம் தன்னார்வலர் திரு. பாஸ்கர் மற்றும் அகரம் முன்னாள் மாணவர்கள் உதவியுடன் வேலைவாய்ப்பு பயிற்சி வகுப்புகள் சிறப்பாக நடைபெற்றன. ●

# பரிவும் பாதுகாப்பும்



◆ பேராசிரியர் ச.மாடசாமி

கல்லூரியில் படித்த காலத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் சிலப்பதிகாரத்தில் 'கால்கோள் காதை' பாடமாக இருந்தது. நான் ஆசிரியராகப் பணியில் சேர்ந்த அடுத்த கட்டத்திலும், மாணவர்களுக்குக் 'கால்கோள் காதை'யே பாடமாக இருந்தது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கண்ணீரையும் கண்ணகியின் கோபத்தையும் சொல்லும் உயிரோட்டமான காதைகள் பல இருக்க, 'கால்கோள் காதை'யையே ஏன் பாடமாகத் தேர்வு செய்கிறார்கள்? அதுபோக, கால்கோள் காதை இளங்கோவடிகள் எழுதியதுதானா என்ற சந்தேகமும் இலக்கிய ஆய்வாளர்களுக்கு இருக்கிறது.

இவ்வளவையும் தாண்டி அது ஏன் பாடமாகப் படிக்கப்படுகிறது? ஒரு மூத்த பேராசிரியர் அன்று எனக்கு பதில் தந்தார். "கால்கோள் காதையில்தான் சேரன் செங்குட்டுவன் வடக்கே போர் தொடுத்துச் சென்று, கனக விசயர் படைகளை அடித்து நொறுக்குகிறான். கண்ணகிக்குச் சிலைசெய்ய கனக விசயர் தலையில் கல்லேற்றி எடுத்து வருகிறான். தமிழனின் வீரம் சொல்லும் காதை இது.''

அப்போதுதான் புரிந்தது. நாம் தோள் கொட்டிப் பூரிக்கவும் நம் பராக்கிரமம் பேசவும் ஒரு 'பகை' வேண்டியிருக்கிறது. நம் கொண்டாட்டத்தில் பாதி, இந்தப் பகையை வீழ்த்துவதில்தான் இருக்கிறது.

அதே பாடப் புத்தகத்தின் இன்னொரு பக்கத்தில் 'பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே' என்ற பாரதி பாடலும், 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்ற திருக்குறளும் இருக்கின்றன.


பகையை ஊதிப் பெருக்கி எழும் ஆர்ப்பாட்டத்துக்கும், பகைவனுக்கு அருளும் உருக்கத்துக்கும் இடையே ஏதோ ஓர் இடைவெளி – யதார்த்தமற்ற இடைவெளி இருக்கிறது. வீரத்தையும் கருணையையும் பாடப்புத்தக அலங்கார வார்த்தைகளாகவே வைத்திருக்கும் இடைவெளி!

பகைக்கான வாய்ப்புள்ள சமூகம்தான் இது. கண்ணசைக்கும் நேரத்தில் ஒரு மனஸ்தாபம் உள்ளே நுழைந்துவிடும். 'முதல் பகை எப்போதும் அண்டை வீட்டானோடு' என்கிறது ஆங்கிலப் பழமொழி.

அது சரி! வாழ்க்கைக் கலை என்பது என்ன? சமூகத்தில் தன்னைப் பாதுகாத்துக்கொண்டும், அதே நேரம் இரக்கத்தைக் கைவிடாமலும் வாழ்வதுதானே வாழ்க்கைக் கலை.

நாங்கள் பள்ளியில் படித்த காலத்தில் வழியெல்லாம் பாம்பு கிடக்கும். பள்ளிக்குள்ளும் சர்வசாதாரணமாக வந்து போகும். ''பாம்பு கிடக்கும்... பார்த்துப் போ!'' என்று தினசரி சொல்லி அனுப்புவார்கள். ''ஜாக்கிரதையாகப் போ! அதே நேரம் பாம்பைக் கல்லால் அடித்துக் கொன்றுவிடாதே! பாம்புகள் குறைந்து வருகின்றன'' என்று சொல்லக்கூடிய கட்டத்துக்கு இன்று வந்திருக்கிறோம்.

ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன் காந்தியடிகள் உருவாக்கிய சபர்மதி ஆசிரமத்தில் எங்கெங்கும் பாம்புகளின் நடமாட்டம் இருந்தது. ''எச்சரிக்கையாக இருங்கள்! ஆனால் ஒரு பாம்பையும் அடிக்கக் கூடாது'' என்பது காந்திஜியின் கட்டளை.



இத்தருணத்தில் நான் பகிர நினைக்கும் கதை, டாக்டர் திஸோடா (Doctor De Sota). இதன் ஆசிரியர் வில்லியம் ஸ்டெயிக் (William Steig).

விலங்குகள் நாகரிக உடை அணிந்து வசிக்கும் நகரம் அது. அங்குதான் டாக்டர் திஸோடா என்ற பல் டாக்டர் வசித்து வந்தார். பல் டாக்டர் வேறு யாருமில்லை. ஒரு

சுண்டெலிதான். சுண்டெலியின் மனைவிதான் மருத்துவமனையின் உதவியாளர்.

வலியில்லாமல் பல்லைப் பிடுங்கி மாற்றுப்பல் வைப்பதில் நிபுணர் திஸோடா. அணில் போன்ற சிறிய விலங்குகள் வலியென்று வந்தால், சிறிய நாற்காலியில் உட்கார வைத்து டாக்டர் சுண்டெலி மருத்துவம் பார்க்கும். ஆடு போன்ற சற்று பெரிய விலங்குகள் வந்தால், அவற்றைத் தரையில் உட்காரச் சொல்லிவிட்டு, திஸோடா ஒரு ஏணி வைத்து ஏறி மருத்துவம் பார்க்கும். காளை போன்ற பெரிய விலங்குகளுக்கு ஒரு பிரத்யேக அறை இருந்தது. அங்கு கயிற்றில் இயங்கும் ஒரு விஞ்ச் இருந்தது. கயிற்றை மனைவி சுண்டெலி இழுக்க, திஸோடா ஒரு சர்க்கஸ்காரர் போல மேலே பறந்து மருத்துவம் பார்க்கும்.

எலிகளைத் தின்னும் விலங்குகளுக்கு மட்டும் அந்தப் பல் மருத்துவமனையில் நுழைய அனுமதி இல்லை. ‘பூனை போன்ற விலங்குகளுக்கு இங்கு மருத்துவம் பார்ப்பதில்லை’ என்ற போர்டு திஸோடாவின் மருத்துவமனை வாசலில் தொங்கும்.

ஒரு நாள் மருத்துவமனை வாசலில் நரி ஒன்று வந்து நின்றது. நரிக்குத் தாங்கமுடியாத பல்வலி. திஸோடா மாடியில் இருந்து கத்தியது... ‘‘நரி சார்! உங்களுக்கு இங்கு மருத்துவம் பார்க்க முடியாது.’’ நரி வலி தாங்கமுடியாமல் கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்தது. திஸோடாவின் மனைவிக்கு மனம் இளகியது. ‘‘கணவரே, இவரை அனுமதிக்கலாம். என்ன வந்தாலும் சந்திக்கலாம்’’ என்றது. நரியை மருத்துவமனைக்குள் அனுமதித்தது திஸோடா.

நரியைத் தரையில் உட்காரச் சொல்லி ஏணியில் ஏறிய திஸோடா, நரியின் பற்களை ஆராய்ந்தது. நரியின் வாயைத் திறக்கச் சொல்லி வாய்க்குள் இறங்கிப் பார்த்தது. எலியின் கால் நரியின் வாய்க்குள் பட்டதுமே நரிக்கு எச்சில் ஊறியது. ‘ஆகா... என்ன ருசி’ என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டது. ஆசையில் நரி வாயை மூடி விட்டால், டாக்டர் திஸோடாவின் கதை முடிந்தது.







எலிக்குப் புரியாதா நரியின் ஆசை? ‘‘வாயைத் திறந்து வையுங்கள்’’ என்று திஸோடா கத்தியது. கூடவே ஏணியைப் பிடித்துக் கொண்டிருந்த மனைவி சுண்டெலியும் கத்தியது. நரி வாயைத் திறந்தே வைத்திருக்க, ஒரு கம்பை அதன் இரு தாடைகளுக்கிடையில் வைத்தன சுண்டெலிகள்.

நரிக்கு ஒரு பல் சொத்தை. பல்லைப் பிடுங்கவேண்டும். அதற்காக நரியின் மூக்கில் மயக்க வாயு செலுத்தப்பட்டது. அரை மயக்கத்தில் இருந்த நரி, தன்னை மறந்து மெல்ல முணுமுணுத்தது. ‘‘பச்சையாகவே சாப்பிடலாம். கொஞ்சம் உப்பு சேத்துக்கணும். கூட கொஞ்சம் ஒயின் இருந்தால் நல்லது.’’

நரியின் முணுமுணுப்பு புரிந்தாலும், எலிகள் எடுத்த காரியத்தை நிறுத்தவில்லை. பெரிய கயிறு கட்டி இழுத்து நரியின் சொத்தைப் பல்லைப் பிடுங்கின.

பல்வலி நின்றது. நரிக்கு நிம்மதி. ‘‘புதிய பல் தயாரித்து வைக்கிறேன். நாளை காலை 11 மணிக்கு வந்து கட்டிக்கொள்ளுங்கள்’’ என்று சொல்லி நரியை டாக்டர் சுண்டெலி அனுப்பி வைத்தது. கையோடு அன்றே நரிக்கு ஒரு மாற்றுப் பல்லும் தயார் செய்துவிட்டது.

அன்றிரவு, ‘‘நரிக்கு மருத்துவம் பார்ப்பது முட்டாள்தனம் இல்லையா?’’ என்று சிறு கலக்கத்தோடு திஸோடா கேட்டது. ‘‘அவருக்கு உதவிதானே செய்கிறோம். பதிலுக்கு அவர் தீங்கு செய்வாரா?’’ என்று மனைவி சுண்டெலி தேற்றியது.

‘‘என்ன ஆனாலும் ஆகட்டும். ஒரு டாக்டர் சிகிச்சையைப் பாதியில் நிறுத்தக்கூடாது’’ என்று திஸோடா முடிவெடுத்தது. ‘‘இருந்தாலும் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்’’ என்று கூறி ஒரு யோசனையை முன்வைத்தது மனைவி சுண்டெலி. அன்றிரவு எலிகள் நிம்மதியாகத் தூங்கின.

மறுநாள் சொன்ன நேரத்துக்கு நரி வந்தது. புதுப் பல்லை மாட்டுவதற்காக ஏணியில் ஏறி நரியின் வாய்க்குள் இறங்கியது திஸோடா. உடனே ஒரு கணம்

வாயை மூடியது நரி. திஸோடா வாய்க்குள் மாட்டிக்கொண்டு தவித்துப் போனது. பிறகு நரி வாயைத் திறந்தது. ''பயப்படாதீர்கள்! சும்மா ஒரு விளையாட்டு'' என்றது.

நரியின் உள்விருப்பம் திஸோடாவுக்குப் புரிந்தது. ஆனாலும், பொறுமையாகப் புதுப் பல்லை மாட்டியது. நரிக்குப் புதுப் பல் கச்சிதமாகப் பொருந்தியது. நரி ஒரு நெகிழ்ச்சியில், ''இந்த எலிகளைச் சாப்பிடுவதா? சேச்சே!'' என்று நினைத்தது. அடுத்த நிமிடமே அதன் ஆசை நியாயத்தை மீறி நின்றது. 'புதுப் பல்லை வைத்தே இந்த எலிகளைச் சாப்பிடவேண்டும்' என்று முடிவு செய்தது.



நரியின் வஞ்சகம் எலிக்குப் புரிந்தது. ''மிச்சம் ஒரு வேலை இருக்கிறது. வாயைத் திறங்கள்'' என்றது திஸோடா. நரி நல்ல பிள்ளையாக வாய் திறந்தது. பல்லின் இடைவெளியை நிரப்புவதுபோல் ஒரு பாத்திரம் நிறைய இருந்த பசையை நரியின் வாய் முழுக்கத் தடவியது திஸோடா. பிறகு வாய்க்குள்ளிருந்து வெளியேறி வந்தது. ''எங்கே, வாயை மூடுங்கள்'' என்றது. நரி வாயை மூடியது. வாய் கிச்சென்று பூட்டிக் கொண்டது.

திஸோடா அமைதியாக, ''இன்னும் ஓரிரு நாட்களுக்கு வாயைத் திறக்க வராது. பிறகு சரியாகப் போகும்'' என்றது.

ஆம், வாயைத் திறக்கமுடியவில்லை. நரியின் ஆசையில் மண்! திறக்கமுடியாத வாயால், ''தேங்க் யூ'' என்று குழறிப் பேசி நரி விடைபெற்றது. எலிகள் சிரித்துக்கொண்டன.

ஒரு தந்தை எழுதுகிறார்...

'என் குழந்தை அதிகம் சிரித்ததும் அதிகம் பேசியதும் இந்தக் கதையைக் கேட்டபோதுதான்!'

பரிவின் காரணமாகப் பாதுகாப்பைக் கோட்டைவிடக் கூடாது என்பதையும், சுயபாதுகாப்பையே நினைத்துக்கொண்டு பரிவு காட்டவேண்டிய தருணங்களைத் தவறவிடக்கூடாது என்பதையும் வேடிக்கையாகச் சொல்லும் கதையல்லவா இது! 'பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே!' என்ற பாரதியின் கனவுக்கும் வடிவம் தரும் இந்தக் கதை. ●


# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

AGARAM FOUNDATION யாதும்
நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## சந்தாதாரர் ஆகுங்கள்!

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | | |
| முகவரி | | | |
| தொலைபேசி | | அலைபேசி | |
| மின்னஞ்சல் | | | |

டிக் செய்யவும்

- ☐ ஓர் ஆண்டு ரூ.150
- ☐ இரண்டு ஆண்டுகள் ரூ.300

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம்.
YADHUM என்ற பெயரில் செக் / டி.டி. அனுப்பவும்.
பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக் / டி.டி.யுடன்
கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55 ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை– 600 033. போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com



# அன்புசூழ் உலகு!

அகரம் அறக்கட்டளையின் விதை திட்டம், அடித்தட்டு மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பு தருகிறது. விதை திட்டத்தில் முக்கியமான பணி, இல்ல நேர்காணல். இந்தத் திட்டத்தில் பங்கேற்று படிக்க விரும்பி விண்ணப்பிக்கும் மாணவ, மாணவிகளின் வீடுகளுக்குச் சென்று கள ஆய்வு செய்யும் பணி இது. மின்சார வசதி, குடிநீர் வசதி, போக்குவரத்து வசதி, கழிவறை வசதி, வீட்டின் அமைப்பு, கிராமத்தின் பொதுவான வசதிகள் போன்ற அவர்களின் வாழ்வியல் சூழலை அறிந்துகொண்டு வருகிறார்கள் தன்னார்வலர்கள். இப்படிச் சென்ற தன்னார்வலர்களின் கள அனுபவப் பதிவுகளில் ஒன்று இது...

'ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டி ஆவான்' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். இந்தப் பழமொழியை மாற்றும் சக்தி கல்விக்கு உண்டு என்பதை அகரம் வழியாக நான் அறிந்தேன்.

அந்த வீட்டில் ஐந்தும் பெண் பிள்ளைகள். நண்டும் சிண்டுமாக இருக்கும்போதே தந்தை இறந்து விட்டார். அதன்பின் அவர்கள் அம்மாவழிப் பாட்டி வீட்டில் வளர்ந்தனர். தந்தையை இழந்தவர்களுக்கு அடுத்த அடியாக, அம்மாவும் மனநலம் பாதிக்கப்பட்டார்.

எல்லோரையும் காப்பாற்றும் சுமை, பாட்டியின் தலையில் விழுந்தது. வீட்டு வாசலில் விறகு அடுப்பு வைத்து, இட்லி சுட்டு விற்று, குழந்தைகளை வளர்த்தார் பாட்டி. அத்தனைப் பெண்களும் அரசுப் பள்ளியில் படித்தனர். இந்த சூழலில், திடீரென பாட்டிக்கும் உடல்நலமில்லாமல் போனது. தங்கைகளைக் காப்பாற்ற, வீட்டின் மூத்த பெண் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் சென்றார். பத்தாம் வகுப்பு முடித்தபின், இரண்டாவது பெண்ணும் அக்காவுடன் வேலைக்குப் போனார்.

இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர், இரண்டாவது தங்கைக்கு படிக்க வேண்டும் என விருப்பம் எழ, மற்றொரு தங்கை படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் சென்றார். மாறி மாறிப் படித்து 2010ல் ஒரு பெண்ணும், 2011ல் ஒரு பெண்ணும் +2 முடித்துவிட்டு வேலைக்குச் சென்றனர்.

2012ல் நான்காவது தங்கை +2 முடித்தார். அவர் மேற்கொண்டு படிக்க விரும்பினார். அகரம் பவுண்டேஷன் பற்றித் தெரிந்துகொண்டு, கல்வி உதவி கேட்டு விண்ணப்பம் அனுப்பினார். அவருக்கு அகரம் முயற்சியால், உயர்கல்வி உறுதி செய்யப்பட்டது. கோயம்புத்தூரில் சிறந்த ஒரு கலைக் கல்லூரியில் படிக்க வாய்ப்பு கிடைத்தது.

2013ம் ஆண்டு வீட்டின் கடைசித் தங்கையும் +2 படிப்பை நிறைவு செய்தார். அவரும் உதவி கேட்டு விண்ணப்பித்தார். ஏற்கனவே +2 முடித்த 3வது பெண்ணும் மேற்படிப்பு படிக்க விரும்பினார். அவரும் உதவி கேட்டார். அகரம் உதவி கிடைக்காவிட்டால், அவர்கள் படிப்பைத் தொடர்வது கடினம் என்பது புரிந்தது. இரண்டு பேருக்கும் சென்னையின் பெருமைமிகு கல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பை அகரம் ஏற்படுத்திக் கொடுத்தது.

மாணவிகள் மூவரும் படித்துக்கொண்டிருக்கும்போதே, உடல்நலம் குன்றியிருந்த அம்மா இறந்து போனார்கள். வயதான பாட்டியை கவனித்துக்கொண்டு இட்லிக் கடையில் ஒருவர் இருக்க, வெளி வேலைக்கு மூத்த சகோதரி சென்று வந்தார். மற்ற மூவரும் படித்து முடித்துவிட்டனர். படித்து முடித்த சகோதரிகளில் மூத்தவருக்கு, அவர் துறைசார்ந்த பணி கிடைத்தது. அந்தக் குடும்பத்தின் முதல் ஐந்து இலக்க வருமானம் பெற்றார். தியாகங்களாலும் கல்வியாலும் வறுமையை அவர்கள் தோல்வியுறச் செய்த அந்தத் தருணம் நெகிழ்ச்சியானது.

அன்புசூழ் உலகு இவர்கள் போன்ற பெண் தெய்வங்களால்தான் இயங்குகிறது.

– ஆண்டனி

# "பூச்சிகளால்தான் பூமி இயங்கிக்கொண்டிருக்கிறது!"



"பூமி உங்கள் கண்முன் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அதில் வாழும் யானை, புலி, ஆடு, மாடு போன்ற முதுகெலும்புள்ள விலங்குகள் அனைத்தையும் நீக்கிவிடலாம். பூமி என்ன ஆகும்? முதல் மூன்று மாதங்கள் தடுமாறும்; அடுத்த ஆறு மாதங்களில் தேறிவிடும். ஓராண்டுக்குள் பூமி இயல்பான நிலைக்கு வந்துவிடும். இப்போது பட்டாம்பூச்சி, வண்டுகள், சிறு பூச்சிகள் போன்ற முதுகெலும்பற்ற உயிரினங்களை நீக்குங்கள். அதன்பின் பூமி என்ன ஆகும்? அதே தடுமாற்றம் இருக்கும். ஆனால், அடுத்த ஓராண்டுக்குள் பூமி அழிந்தே போகும்! ஏனெனில் பூச்சிகள் இல்லையேல், புவியில் செடி, கொடிகள் வாழ முடியாது. செடி, மரங்கள் இல்லையெனில் மழை இருக்காது. புவியில் எதுவும் இருக்காது. ஆக, நம் பூமி பூச்சிகளால்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் தத்துவத்தைச் சொன்னவர், பிரபல உயிரியல் அறிஞர் ஈ.ஓ.வில்சன்.

நாம் உண்ணும் உணவில் மூன்றில் ஒரு பகுதி பூச்சிகளால்தான் உற்பத்தியாகிறது. பூச்சிகளால் மகரந்தச் சேர்க்கை நடப்பதன் மூலம் அவை உற்பத்தியாகின்றன. கொட்டைகள், தானியங்கள், எண்ணெய் வித்துகள், காய்கறிகள், பழங்கள் உற்பத்தியாக பூச்சிகளின் உதவி தேவை. செடிகளில் உள்ள பூக்களில் வந்து அமரும் பூச்சிகளால் பரவும் மகரந்தத்தின் மூலமாக இந்த உற்பத்தி நடக்கிறது. முதுகெலும்புள்ள விலங்குகளைக் காக்கக் காட்டும் அதே அக்கறையை முதுகெலும்பில்லாத பூச்சிகள்மீதும் காட்ட வேண்டும்'' என்கிறார் பூச்சியியல் அறிஞர் பி.ஏ.டானியல்.

கோவையில் வசிக்கும் டானியல், தமிழகத்தின் குறிப்பிடத் தகுந்த பூச்சியியல் ஆய்வாளர்களில் ஒருவர். சூழலியல் பாதுகாப்பு சார்ந்தும், சூழலியல் கல்விப் பணிகள் சார்ந்தும் இயங்குபவர்.

''சொந்த ஊர் ராஜபாளையம். விலங்கியலில் முதுகலை படித்துவிட்டு, கேரள பல்கலைக்கழகத்தில் பிஹெச்.டி முடித்திருக்கிறேன். யானைக்கால் நோயைப் பரப்பும் கொசுக்கள் குறித்து ஆய்வு செய்திருக்கிறேன். மனிதர்களை மட்டும் கடிப்பவை, விலங்குகளை மட்டும் கடிப்பவை, பறவைகளை மட்டும் கடிப்பவை, இரவில் கடிப்பவை, பகலில் கடிப்பவை என கொசுக்களில் பலவகைகள் உண்டு. இவற்றில் எந்த வகையான கொசுக்கள் மனிதர்களைத் தேடிப் பிடித்து கடிக்கின்றன, யானைக்கால் நோயைப் பரப்பும் கொசுக்கள் முட்டையிட எந்த அடிப்படையில் இடங்களைத் தேர்வு செய்கின்றன, அவற்றைக் கவரும் விஷயங்கள் எவை என்பதே என் ஆய்வு. நோய்ப் பரவலைத் தடுக்க என்ன செய்யலாம் என்பதே இந்த ஆய்வின் நோக்கம்.

ஆய்வு படிப்பை முடித்தபின், பணிக்குச் செல்ல முடியாத சூழல் இருந்தது. வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்காமல், அருகில் இருந்த ஸ்ரீவில்லிபுத்தூர் வனத்துறை அலுவலரிடம், 'மாலை அல்லது அதிகாலை நேரத்தில் பார்க்கக்கூடிய பணி ஏதேனும் இருந்தால் கொடுங்கள்' எனக் கேட்டேன். அவரோ, 'நீங்கள் பூச்சியியல் நிபுணர். இங்கே யானை தொடர்பான ஆய்வுப் பணிகள்தான் இருக்கின்றன' என்றார். யானைக்கும் பூச்சிகளுக்கும் உள்ள தொடர்பு குறித்து நான் ஆய்வு செய்யத் தொடங்கினேன். யானையின் கழிவு காடுகளில் இருக்கும். அது மண்ணோடு மண்ணாகப் போகும்வரை, அதை எத்தனை வகையான பூச்சிகள் பயன்படுத்துகின்றன என்று ஆராய்ந்தேன். முதலில் பட்டாம்பூச்சிகள், அடுத்து அந்திப்பூச்சிகள், பிறகு வண்டுகள், இறுதியாகக் கரையான்கள் என பலவகையான பூச்சிகள் அந்தக் கழிவை உணவாகப் பயன்படுத்தி மறுசுழற்சி செய்கின்றன.

காட்டுயிர்ப் பாதுகாப்பில் விலங்குகள் கணக்கெடுப்பு முக்கியமானது. இதில் பெரிய விலங்குகளின் கழிவுகளை அந்த விலங்குகள் அங்கே வாழ்வதற்கான மறைமுகமான சாட்சியாகக் கொள்வார்கள். கழிவுகளை பூச்சிகள் சிதைத்திருக்கும் தன்மையை வைத்து, கழிவுகளை இட்ட நாளைக் கணிக்க முடியும். அந்தவகையில் என்னுடைய ஆய்வு முக்கியத்துவம் பெற்றது. இதைப் பார்த்துதான் தற்போது பணியாற்றும் நிறுவனம் என்னைப் பணிக்கு அழைத்தது'' என்கிற

பி.ஏ.டானியல்



டானியல், ஜூ அவுட்ரீச் ஆர்கனைசேஷன் என்கிற பன்னாட்டு நிறுவனத்தில் தெற்காசிய அளவிலான அறிவியலாளராகப் பணியாற்றுகிறார். சர்வதேச இயற்கை மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்பு மையத்தின் தெற்காசியப் பொறுப்பாளராகவும் இருக்கிறார்.

கொசுக்கள் குறித்து தற்போதும் ஆய்வுகளை மேற்கொண்டுவரும் இவர், பருவ நிலை மாற்றத்தை கொசுக்களின் மூலம் அறிந்துகொள்ளும் தொடர் ஆய்வில் ஈடுபட்டிருக்கிறார். ''கொசுக்களால் மறைமுகமாக சில நன்மைகளும் உண்டு. பருவநிலை மாற்றத்தை சுட்டிக்காட்டும் காரணிகளாக அவை இருக்கின்றன. உலகம் முழுக்க 48 இடங்களில் கொசுக்களின் மூலம் காலநிலை மாற்றத்தை கண்காணிக்கும் ஆய்வு நடந்துவருகிறது. கோவையில் கடந்த மூன்றரை வருடங்களாக நாங்கள் ஆய்வு செய்கிறோம். இங்குள்ள விலங்குக் காட்சிக்கூடங்களைக் கண்காணித்து, அவற்றில் புதிதாக ஏதேனும் கொசு வந்திருக்கிறதா? அது நோய் பரப்பக்கூடியதா? போன்ற ஆய்வுகளை செய்கிறோம். இதன் மூலம் பேராபத்துகளை முன்கூட்டியே அறிந்து தடுக்க இயலும்'' என்பவர், அழியும் தறுவாயில் இருக்கும் முதுகெலும்பில்லா உயிரினங்களைக் கண்டறியும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

''நத்தை, பூரான், பட்டாம்பூச்சி, வண்டுகள் போன்ற முதுகெலும்பில்லாத உயிரினங்கள் குறித்த அறிவியல்பூர்வமான தகவல்களை சேகரிக்கத் தொடங்கினோம். இதன் மூலம் எந்த உயிரினம் அழியும் தறுவாயில் இருக்கிறது, எது அழிந்துவிட்டது, எது பேராபத்தில் இருக்கிறது எனக் கண்டறிய முடிந்தது. ஐந்து மாநிலங்களில் 1,146 உயிரினங்கள் பற்றி நடந்த ஆய்வில், அவற்றில் 16 சதவிகித உயிரினங்கள் அழியும் நிலையில் இருந்ததைக் கண்டோம். இத்தகைய ஆய்வுகளின் நோக்கம் ஆவணப்படுத்துவதுடன் பாதுகாப்பதுமாகும். நேரடியாக மக்களைச் சேரும் வகைகளில் எளிமையான கதைகள், படங்கள் மூலமாக அழியும் உயிரினங்கள் குறித்து சொல்லிக்கொடுத்தோம். பெரும்பாலும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு சொன்னோம்'' என்கிற டானியல், விளையாட்டின் மூலம் சொல்லித் தருவதே குழந்தைகள் மனதில் ஆழமாகப் பதிவதாகச் சொல்கிறார்.

''நாம் 100 பேர் முன்னால் பேசுகிறோம் என்றால், அதில் சிலருக்கு மட்டுமே ஆர்வம் இருக்கும். அதிலும் கூட சிலர் உடனே எதிர்வினை செய்வார்கள். சிலர் வீட்டுக்குப் போய் யோசிப்பார்கள். சிலர் ஒரு வாரம் கழித்து சிந்திப்பார்கள். ஆனால் நிறைய மாணவர்கள் கடிதம் போடுவதையோ, மின்னஞ்சல் அனுப்புவதையோ செய்கிறார்கள். 2003-ம் ஆண்டு ஒரு கல்லூரியில் பேசும்போது அங்கே பி.டெக் படித்த மாணவர் ஒருவர், எனக்குக் கடிதம் அனுப்பினார். தனக்குக் காட்டுயிர்கள் குறித்து ஆர்வம் இருப்பதைச் சொன்னார். இன்று அவர் எம்.எஸ்ஸி வைல்ட் லைஃப் சயின்ஸ் முடித்து, சீனாவில் பணியாற்றுகிறார். இப்படியான ஆர்வமிக்க மாணவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். சில சமயம் அவர்களுடைய கேள்விகளுக்கு எங்களால்கூட பதில் சொல்ல முடிவதில்லை. இரண்டாம் வகுப்பு மாணவி ஒருவர், புலியில் எத்தனை துணை இனங்கள் உள்ளன? என கேட்டார். நான் அசந்துபோய் நின்றுவிட்டேன். காட்டுயிர், சூழலியல் குறித்து நல்ல விழிப்பு உணர்வு வந்திருக்கிறது. வரவேற்கக்கூடிய விஷயம் இது'' என நம்பிக்கையோடு முடித்தார் டானியல்.

– மு.வி.நந்தினி



# தண்ணீரே இல்லாத நகரங்கள்!

மத்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பு, நம் நீர்வளம் பற்றிய அதிர்ச்சியான ஓர் அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறது. மத்திய அரசின் வரி வருவாயை மாநிலங்களுக்கிடையே பங்கிடும் உயர் அதிகாரம் பெற்றது நிதி ஆயோக். நீர் ஆதாரங்களை நிர்வகிப்பது தொடர்பாக மாநிலங்களுக்கு வழிகாட்ட, 'முழுமையான நீர் மேலாண்மைக் குறியீடு' ஒன்றை அந்த அமைப்பு வெளியிட்டது. 'இந்தியா வரலாற்றிலேயே மிக மோசமான தண்ணீர்ப் பிரச்னையை இப்போது சந்தித்துக்கொண்டிருக்கிறது' என்பதுதான் அந்த அறிக்கை சொல்லும் எச்சரிக்கை.

'இந்தியாவில் சுமார் 54 சதவிகித ஆழ்துளைக் கிணறுகளில் மிகவேகமாக நீர்மட்டம் குறைந்துகொண்டிருக்கிறது. இதனால் வரும் 2020-ம் ஆண்டிலேயே 21 நகரங்களில் நிலத்தடி நீரே சுத்தமாக இல்லாமல் போய்விடும்' என எச்சரிக்கிறது அந்த அறிக்கை. நம் அருகில் உள்ள பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் தலைநகர் டெல்லி ஆகியவை இந்த நகரங்கள் பட்டியலில் உள்ளன. ஒரு நகரத்தில் நிலத்தடி நீரே இல்லாமல் போனால், அங்கு வாழும் பல லட்சம் மக்கள் என்ன செய்வார்கள் என்பதை நினைத்தாலே நடுக்கம் வருகிறது. எங்கோ இருக்கும் தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் நகருக்கு இப்படி ஒரு பிரச்னை வரப் போகிறது என சமீபத்தில்தான் பேசிக்கொண்டிருந்தோம். நம் அருகிலேயே அப்படி ஒரு அவலம் நிகழப் போகிறது.

வரும் 2030-ம் ஆண்டில் இந்தியர்களின் தேவையில் சரிபாதியைப் பூர்த்தி செய்யக்கூட நம்மிடம் தண்ணீர் இருக்காதாம். இந்தியாவில் 63 சதவிகித விவசாயம், நிலத்தடி நீரை நம்பியே இருக்கிறது. தண்ணீர் இல்லாமல் போனால், அவர்களுக்கும் பாதிப்பு; நாட்டின் உணவுப் பாதுகாப்பும் அச்சுறுத்தலுக்கு ஆளாகும்.

ஏற்கெனவே இந்தியாவின் நிலைமை மோசமாக இருக்கிறது. 130 கோடி மக்களில் 16 கோடி பேருக்கு சுத்தமான தண்ணீர் கிடைப்பதில்லை. உலகிலேயே அதிகம் பேர் சுத்தமான தண்ணீருக்காக தவிப்பது இங்குதான். இந்தியாவில் மோசமான தண்ணீரைப் பயன்படுத்தி, அதனால் நோய்கள் வந்து இறப்பவர்கள், ஆண்டுக்கு இரண்டு லட்சம் பேர்.

கடுமையான வறட்சியும், திடீர் வெள்ளமும் மாறிமாறி அச்சுறுத்தும் காலம் இது. தேவையில்லை என கீழே ஊற்றும் ஒரு டம்ளர் தண்ணீரை எடுக்கக்கூட 500 அடி ஆழத்துக்குக் கிணறு தோண்ட வேண்டியுள்ளது என்பதுதான் சுடும் நிஜம்.

தண்ணீருக்காக வானத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அதே நேரத்தில், மழைநீரை சேமிக்கும் முயற்சிகளில் இறங்குவதுதான் ஒரே தீர்வு. வரும் மழைக்காலத்தில் அதைச் செய்வதுதான், நம் முன்னே காத்திருக்கும் கடமை.

இந்த ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தின் முழக்கமே 'பிளாஸ்டிக் மாசை ஒழிப்போம்' என்பதுதான். ஜூன் 5-ம் தேதி உலக சுற்றுச்சூழல் தினத்தை ஏற்றுக் கொண்டாடும் தேசமாக ஐ.நா அமைப்பால் இந்தியா அறிவிக்கப்பட்டது. இதனால், மற்ற நாடுகளைவிடவும் கூடுதல் பொறுப்பு இந்தியாவுக்கு வந்துள்ளது. எனவே, பிளாஸ்டிக் ஒழிப்பு முயற்சியின் முதல் கட்டமாக 'ஒருமுறை மட்டுமே பயன்படுத்திவிட்டுத் தூக்கியெறியும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை அரசு அலுவலகங்களில் முற்றிலுமாகத் தவிர்ப்பது' என்ற முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது.

இது இரண்டு மாதங்களில் படிப்படியாக அமல்படுத்தப்படும். முதல்கட்டமாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஜூன் 13-ம் தேதியிலிருந்து இதை அமல்படுத்தத் தொடங்கிவிட்டது. ''எங்கள் அலுவலகத்தில் இப்போதெல்லாம் கூட்டங்களில் தண்ணீர் பாட்டில் வைப்பதில்லை. கண்ணாடி டம்ளரில் தண்ணீர் ஊற்றி வைக்கிறோம். பிளாஸ்டிக் கப், தட்டு, டம்ளர், பிளாஸ்டிக் பேனர்கள் என எதற்கும் அனுமதி இல்லை'' என்கிறார், மத்திய சுற்றுச்சூழல் துறை செயலாளர் சி.கே.மிஸ்ரா. இதைப் பார்த்துவிட்டு மத்திய வருவாய்த்



# 150 ஆண்டுகளுக்குப் பிறகு வந்த சிலந்தி!

'இந்த இனம் அழிந்துவிட்டது' என்று 150 ஆண்டுகளுக்கு முன்பு முடிவு செய்யப்பட்ட ஒரு இந்திய சிலந்தி இனம், இப்போது மீண்டும் கண்டறியப்பட்டுள்ளது. Chrysilla volupes என்ற அந்த சிலந்தி இனம், மேற்குத்தொடர்ச்சி மலையின் வயநாடு உயிரியல் சரணாலயத்தில் ஆராய்ச்சியாளர்கள் பார்வையில் பட்டிருக்கிறது.

உலகப் புகழ்பெற்ற பூச்சியியல் அறிஞரான ஃபெர்டினாண்ட் ஆன்டன் பிரான்ஸ், கடந்த 1868ம் ஆண்டு குஜராத்தின் ஏரி ஒன்றில் இந்த இனத்தின் ஆண் சிலந்தி ஒன்றைக் கண்டுபிடித்தார். குதிக்கும் சிலந்தி வகையைச் சேர்ந்த இது, கண்கவர் வண்ணங்களோடு காணப்பட்டது. அதன்பிறகு இந்த இனத்தில் ஒரு சிலந்தியைக் கூட யாரும் பார்க்கவில்லை.

இந்நிலையில் கேரளாவின் இரிஞ்சாலகுடா கிறிஸ்ட் கல்லூரி ஆராய்ச்சியாளர்கள் குழு இந்த இனத்தின் ஆண் மற்றும் பெண் சிலந்திகளை வயநாட்டில் கண்டறிந்துள்ளது.

''அடர்நீலமும் ஆரஞ்சு வண்ணமும் கலந்த உடலமைப்பும், கொஞ்சம் மஞ்சள் சேர்ந்த கால்களுமாக இது காணப்படுகிறது. பெண் சிலந்தியைவிட ஆண் சிலந்தி ஒல்லியாக இருக்கிறது. தலையின் முன்பக்கத்தில் எட்டு கண்கள் இருக்கின்றன. பசுமை இலைகளுக்கு நடுவே மறைந்து முட்டையிடுகின்றன. பெண் சிலந்திகள் ஒருமுறை ஐந்தாறு முட்டைகளை இடுகிறது'' என்கிறார் இதைக் கண்டறிந்த குழுவின் தலைவரான சுதிர்குமார்.

உயிரியல் உலகம் இந்தக் கண்டுபிடிப்பைக் கொண்டாடிவருகிறது.

# பிளாஸ்டிக் பயன்படுத்தாத அரசாங்கம்!



துறை அமைச்சகமும் இதேபோலப் பின்பற்றுகிறது. ''விரைவில் எல்லா துறைகளும் இப்படி மாற வேண்டும்'' என மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் எல்லோருக்கும் கடிதம் எழுதியுள்ளது. 'அரசு உயர் அதிகாரிகள் என்ன செய்கிறார்களோ, அதையே அடுத்தடுத்த இடங்களில் இருப்பவர்கள் பின்பற்றுகிறார்கள். நாம் மாறினால், எல்லாமே மாறும்' என்பது சுற்றுச்சூழல் அமைச்சகம் வலியுறுத்தும் செய்தி.

இந்த மாற்றங்களைப் பார்த்துவிட்டு, ''இந்தியா உலக நாடுகளுக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாக மாறுகிறது'' என பாராட்டு தெரிவிக்கிறார், ஐ.நா சுற்றுச்சூழல் திட்டத்தின் தகவல் பிரிவு இயக்குநர் நய்சன் சபா.

சுற்றுச்சூழல் செய்திகள்



# நல்ல மழை பெய்ய வேண்டும்!

சுற்றுச்சூழல் செய்திகள்

சமீப ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தென்மேற்குப் பருவமழை இப்போது நன்றாகப் பெய்யத் தொடங்கியுள்ளது. இதுதவிர கோடை மழையும் ஆங்காங்கே நன்றாகப் பொழிகிறது. இந்த ஆண்டு வேளாண்மை செழிக்கும் என்ற நம்பிக்கையை இது ஏற்படுத்தியுள்ளது. இந்தியா அடிப்படையில் ஒரு விவசாய நாடு. நம் மக்களில் பெரும்பகுதியினர் விவசாயத்தையே நம்பியிருக்கின்றனர். மழை பெய்தால்தான் மண் பசுமை காணும். வான்மழை பொய்த்தால் பலருக்கு வாழ்க்கையே கேள்விக்குறி ஆகிவிடும். நல்ல மழை பெய்து இந்த ஆண்டு எல்லோரது வாழ்வும் வளமாகும் என்ற நம்பிக்கையை இயற்கை கொடுத்திருக்கிறது.

அசாம், மகாராஷ்ட்ரா போன்ற சில மாநிலங்களில் அதிக மழை பெய்து வெள்ளமே வந்துள்ளது. கர்நாடகா, கேரளா, கோவா போன்ற மாநிலங்களில் இயல்பைவிட அதிக மழை பெய்துள்ளது.

'இந்த ஆண்டு பருவமழை 97 சதவிகிதம் அளவுக்குப் பெய்யும்' என இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. வரும் மாதங்களிலும் நல்ல மழையை எதிர்பார்க்கலாம். எனினும் அக்டோபரில் தொடங்கும் வடகிழக்குப் பருவமழையையே தமிழ்நாடு பெரிதும் நம்பியிருக்கிறது. பருவமழையைக் கெடுக்கும் எல் நினோ போன்ற சூழலியல் மாற்றங்கள் எதுவும் இந்த ஆண்டு இல்லை என்பதால், வடகிழக்கு பருவமழையும் நன்றாகவே பெய்யும் என நம்பிக்கை எழுந்திருக்கிறது.

ஒரு பகுதியில் வறட்சியும் இன்னொரு பகுதியில் வெள்ளமும் இயற்கைப் பேரிடராகத் தாக்குவது இந்தியா என்ற பெரிய தேசத்தில் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் துயரம். இந்த ஆண்டு அப்படி இல்லாமல் வளமே கொழிக்கட்டும்!

# நாய் நண்பன்!

காடுகளில் திரிந்துகொண்டிருந்த வனவிலங்கு நாய். அது எப்படி மனிதர்களின் நண்பனாக மாறியது? நாய்களின் மரபணுவையும், ஓநாய்களின் மரபணுவையும் ஒப்பிட்டு விலங்கியல் நிபுணர்கள் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். ஒரு காலத்தில் ஓநாய்கள் போலவே இரவில் காடுகளில் திரிந்து வேட்டையாடிய விலங்குகள்தான் நாய்களும். அச்சுறுத்தும் தோற்றத்தையும் மிரட்டலான சுபாவத்தையும் கொண்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக பழகிப் பழகி, பலரின் குடும்பத்தில் ஓர் அங்கமாகவே மாறியுள்ளன.

நாய்களின் எந்த மரபணு அவற்றை மனிதர்களுக்கு அன்பானதாகவும் விசுவாசம் மிக்கதாகவும் மாற்றியது என்பதைத்தான் இப்போது ஆராய்கிறார்கள். அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழு ஒன்று இந்த ஆராய்ச்சியைச் செய்கிறது. புதைபொருள் அகழாய்வில், ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்களோடு சேர்த்து ஈமக்கிரியை செய்து புதைக்கப்பட்ட சில நாய்களின் மரபணுக்கள் கிடைத்தன. இவை தவிர கிராமத்து நாய்களின் மரபணுக்கள், மனிதர்களோடு மிக நெருக்கமாகப் பழகும் சில நாய் இனங்களின் மரபணுக்கள் ஆகியவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.



''சில குறிப்பிட்ட மரபணுக்கள்தான் இவற்றை வீட்டு விலங்குகளாக மாற்றியுள்ளன. இவை நாய்களின் மூளை செயல்பாட்டிலும், பழக்க வழக்கங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன'' என்கிறார் இந்த ஆராய்ச்சியில் பங்கு வைக்கும் அமண்டா பெண்டல்டன்.


2D ENTERTAINMENT
சூர்யா
வழங்கும்
கார்த்தி நடிக்கும்
SAKTHI FILM FACTORY RELEASE
ஜூலை
வெளியீடு
கடைக்குட்டி
சிங்கம்
எங்கள் வீட்டு பிள்ளை
எழுத்து – இயக்கம்
பாண்டிராஜ்
R.வேல்ராஜ் D.இமான் K.வீரசமர் B.F.A., ரூபன்
யுகபாரதி திலிப் சுப்பராயன் பிருந்தா, பாஸ்கர் ராஜாகிருஷ்ணன் பூர்ணிமா ராமசாமி
நட்ராஜ் விஜி RED DOT பவன் SYNC CINEMA B.செந்தில்குமார் முருகன் ஜான்சன்
இணை தயாரிப்பு ராஜ்சேகர் கற்பூரசுந்தரபாண்டியன்
தயாரிப்பு சூர்யா
SONY MUSIC
KNACK STUDIOS

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050. Day of Publishing: 01-07-2018

ஒவ்வொரு மரமும் இயற்கையின் வரம்
ஈடில்லா பயன்களை மரங்கள் தரும்.
மண் செழிக்க உயிர்கள் தழைக்க
எண்ணிலடங்கா மரங்கள் வளர்ப்போம்.





மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ ©
காட்டன்
வேஷ்டிகள்
சர்ட்டுகள்
பனியன்கள்
Shop online @ www.ramrajcotton.in
கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்
**Follow us** RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia